- முதலாவதாக, தேவை ஏற்பட்டபோது – அதன் நிர்பந்தம் அழுத்தியபோது – தமிழ் அயல்மொழி ஒலியன்களுக்காக புதிய வரிவடிவங்களை ஏற்றது.
- இரண்டாவதாக, இந்த ஏற்பும் ஐரோப்பிய மொழிகளிலிருந்து ஒலிபெயர்க்க வேண்டிய நிர்பந்தம் வந்தபோதே பரவலாக ஏற்கப்பட்டது. நீடிக்ககாரணமானது.

எனினும் இந்த மாற்றங்கள் போதுமானவை அல்ல. க, ட, த, ப ஆகிய நான்கு முக்கிய வல்லினங்களும் சொல்லுக்கு நடுவில் மெல்லினத்தை தொடர்ந்து வரும்போது ga, da, dha, ba ஒலிகளை குறிக்கின்றன. எனவேதான், London என்கிற சொல் ஒலிபெயர்க்கப்பட்ட போது இயல்பாகவே துல்லியமாக லண்டன் என்று அமைந்தது. என்றாலும் இதே ஒலிகள் ஒலி பெயர்க்கப்பட்ட சொல்லுக்கு முதலிலும் இறுதியில் மெய்யெழுத்தாக தனித்தும் வரும்போது துல்லியமாக அந்த ஒலிகளை சுட்டப்பயன்படுத்த முடிவதில்லை. (உதாரணத்துக்கு Goliath, CAD) இதற்கான தீர்வு, இந்த ஏழு ஒலியன்களுக்கு சொல்லுக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் எந்த இடத்தில் வந்தாலும் ஒரேமாதிரி ஒலிப்பைத் தருகிற வரிவடிவங்களை உருவாக்குவதே ஆகும். இதற்கான தீரிவை நோக்கிய முயற்சியாக சில ஆலோசனைகளை விவாதத்துக்கு வைக்கவிரும்புகிறேன்.

## நிலவும் வரிவடிவங்களின் நீட்சியாக புதிய வரிவடிவங்களை வருவித்தல்

உலகத்தின் எல்லா மொழிகளிலும் உள்ள எல்லா ஒலிக்குறிப்புகளுக்கும் தமிழில் எழுத்துக்களை உருவாக்கித் தீர்த்துவிடுவது என்பதல்ல இந்த ஆய்வுரையின் நோக்கம். ஆங்கிலத்தில் உள்ள எல்லா ஒலியன்களுக்கு தமிழில் இணைகளை உருவாக்குவதும் கூட இதன் நோக்கமல்ல. பன்னாட்டளவில் பொதுவாக ஏற்கப்படுகிற, ஒலியியல் ரீதியாக தரப்படுத்தும் செய்யப்பட்ட சொற்களை ஆங்கிலம் வழி ஒலிபெயர்க்கும்போது சந்திக்கிற பெரிய பிரச்னையை தவிர்க்கவும் ஒலிபெயர்ப்பின் மூலமாக தகவல் சிதைவதற்கு இடம் தரக்கூடாது என்பதற்காகவும் மட்டுமே இந்த மாற்று ஏற்பாடு வேண்டும் என்று இந்த ஆய்வுரை வலியுறுத்துகிறது.

அதற்கான தீர்வை நோக்கிய ஆலோசனைகள் என்ன ?

- க், ட், த், ப் ஆகிய நான்கு அதிர்வற்ற வல்லினங்களின் அதிர்வுள்ள மாற்றொலிகளான g, d, dh, b ஆகியவற்றுக்கு தனியாக நான்கு புதிய எழுத்துக்களை உருவாக்கி சேர்த்துக் கொள்ளுதல்.

- கிரந்த எழுத்துக்களின் உதவியோடு ச்-இன் மாற்றொலிகளான ஜ்-உம் ஸ்-உம் ஏற்கனவே ஏற்கப்பட்டுள்ளன. ஆனால், ch என்கிற ஒலியனுக்கான தமிழ் வடிவம் உருவாக்கப்பட வேண்டும்.
- x, z ஆகிய ஒலியன்களுக்கும் வரிவடிவம் காணப்பட வேண்டும்.

இதற்கு தேவையான வரிவடிவங்களை எப்படி உருவாக்குவது என்ற கேள்விக்கான பதிலை தமிழில் ஜ, ஸ, ஷ, ஹ, ஃப ஆகியவை ஏற்கப்பட்டதின் பின்னணியிலிருந்து வருவிக்கலாம். முதல் நான்கு எழுத்துக்களும் தமிழ் வரிவடிவத்தோடு ஒட்டிய, தமிழ் நாட்டில் வடமொழியை எழுதுவதற்காக பயன்படுத்தப்பட்ட, தமிழ் எழுத்துக்களோடு வடிவ ஒற்றுமைமிகவும் கொண்ட கிரந்த எழுத்துக்களிலிருந்து எடுக்கப்பட்டன என்பதால் அதில் அந்நியத்தன்மையும் வரிவடிவ வித்தியாசமும் இல்லாமல் போய்விட்டன. ஃப் என்பதும் நடைமுறையில் உள்ள இரு தமிழ் எழுத்துக்களின் கூட்டுதான்.

இந்த அடிப்படையில் பார்க்கையில், புதிய வரிவடிவங்களை உருவாக்குவது என்பதற்கு நடப்பில் உள்ள வரிவடிவங்களின் நீட்சியாக, சில மாற்றங்களை செய்து புதிய வடிவங்களாக அவற்றை அறிமுகப்படுத்துவது என்று அர்த்தப்படுத்திக்கொண்டால் அது சரியான வழியாக இருக்கும் என்று தோன்றுகிறது.

கீழ்கண்ட ஆலோசனைகளை யோசிக்கலாம்:

'\' அல்லது '\' அல்லது '.' என்கிற குறியீடு ஒன்றை வித்தியாசப்படுத்தும் குறியீடாக பயன்படுத்தலாம். உதாரணத்துக்கு, 'க' என்ற வரிவடிவத்துடன் இந்த மூன்றில் ஏதோ ஒரு குறியீட்டை இணைத்து 'க' அல்லது 'க' அல்லது 'க' போன்ற ஒரு வடிவத்தை உருவாக்கி அதை ga என்று உச்சரிக்க வேண்டும் என்று விதிக்கலாம். அதே சமயம் இந்த புதிய குறியீடுகள் ஒலிபெயர்ப்புக்கு மட்டுமே என்று வரம்பிடவேண்டும். இந்த உத்தேச வடிவ அமைப்பில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஏழு ஒலியன்களுக்கான தமிழ் வடிவங்களை கீழே அட்டவணை இட்டிருக்கிறேன்.

| எழுத்து | நடப்பு ஒலி | கூடுதல் ஒலி | மூன்று உத்தேச வடிவங்கள் | | |
|---|---|---|---|---|---|
| க் | k | g | க் | க் | க் |
| ச் | s/c | ch | ச் | ச் | ச் |
| ட் | t | d | ட் | ட் | ட் |
| த் | th | dh | த் | த் | த் |
| ப் | p | b | ப் | ப் | ப் |
| ஸ் | (s)s | x | ஸ் | ஸ் | ஸ் |
| ஜ் | j | z | ஜ் | ஜ் | ஜ் |

இந்த உத்தேச வரிவடிவங்களின் முக்கிய அம்சங்கள்:

1. இந்த வரிவடிவங்கள் தற்போது மாற்றாக பயன்படுத்தப்படும் வரிவடிவங்களின் நீட்சியே. எனவே புதிய வடிவங்கள் தன் தாய் வடிவத்தின் ஒலியின் மாற்றொலியே என்பதை எளிதில் நிரூபிக்கும். எல்லா புதிய வடிவங்களுக்கும் ஒரே வகையான புதுக் குறியீட்டை அளிப்பதன் மூலமாக அவை ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்பதையும் காட்ட முடியும் (உதாரணமாக, குறியீடு இருந்தால் அது அதிர்வொலி என்பது போல)

2. புதிதாக தரப்படுத்தபடவுள்ள எழுத்துரு குறியீட்டுமுறை (charecter encoding), விசைப்பலகை இட ஒதுக்கீடு (keyboard layout) ஆகியவையும் இந்த மாற்று எழுத்துக்களை ஏற்பது எளிது. கூடுதல் வடிவங்களான இந்த ஏழையும் குறியீட்டுப்பட்டியலில் கூடுதல் எழுத்துக்களாக ஏற்கமுடியும். விசைப்பலகையைப் பொறுத்தவரை, கூடுதல் குறியீட்டுக்காக ஒரேயொரு விசையை ஒதுக்குவதன் மூலம் பிரச்சனையை தீர்த்துவிடலாம். ஆக, ஒரு சின்னஞ்சிறு குறியீட்டைத் தீர்ப்பதன் மூலமே ஒலிபெயர்ப்பு சவாலை முறியடிக்கமுடியும் என்று தெளிவாக தெரிகிறது.

இங்கு இதே பிரச்னை சம்பந்தப்பட்ட ஒரு முக்கிய முன்னுதாரணத்தை எடுத்துக்காட்டுவது நல்லது. மேலும் அது யூனிகோட் சம்பந்தப்பட்ட ஒன்று என்பதால் தற்போதைய விவாதத்துக்கு அது முக்கியத்துவத்தையும் அளிக்கும்.

## புதிய எழுத்துக்களை சேர்ப்பதற்கு யூனிகோட் தரும் வாய்ப்பு – தேவநாகரி முன்னுதாரம்: ஒரு பார்வை வீச்சில்

The Unicode Consortium வெளியிட்டுள்ள The Unicode Standard, Version 2.0 புதிய எழுத்துக்களை சேர்க்கவிரும்புவர்களுக்கு ஆறுதலைத் தருகிறது. இந்திய மொழிகளைப் பொறுத்தவரை, ISCII – II வையே அது மூல தரப்படுத்தமாக எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த தரப்படுத்தம் தமிழைப் பொறுத்தவரை முழுமையானதோ முறையானதோ அல்ல என்கிற குற்றச்சாட்டை மறுக்கமுடியாது என்பதை ஏற்றுக்கொள்ளும் இந்த ஆய்வுரை வேறொரு கோணத்திலிருந்து அதன் அம்சங்களை சிலவற்றை ஒலிபெயர்ப்பு குறித்த ஆய்வுக்கு பயன்படுத்திக்கொள்வதோடு நிறுத்திக் கொள்கிறது.

எல்லா இந்திய மொழிகளுக்கான குறியீட்டுப்பட்டியல்களிலும் சில இடங்களை எதிர்காலத்தில் சேர்க்கப்படக்கூடிய வரிவடிவங்களுக்காக என்று காலியாக ஒதுக்கி வைத்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, தமிழுக்கென ஒதுக்கப்பட்ட 0B80 – 0BF2 ஆகியவற்றுக்கிடையிலான 115 இடங்களில் 54 இடங்கள் காலியாக <reserved> இடமாக வைத்திருக்கிறது. இந்த இடங்களில் கூடுதல் வடிவங்களை முறைப்படி சேர்த்துக்கொள்ளலாம். உதாரணமாக, கன்னடம் f க்கான புதிய வரிவடித்தை அவ்வாறே சேர்த்துக் கொண்டிருக்கிறது.

தேவநாகரிக்கான குறியீட்டுப் பட்டியலை ஆராயும்போது, ஒரு முக்கிய மாற்றம் தென்படுகிறது. Various Signs என்கிற இனத்தில் '.' என்கிற ஒரு கூடுதல் வரிவடிவம் சேர்க்கப்பட்டு, அதற்கான காரணமாக for extending the alphabet to new letters எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதே முறை குஜராத்தி, ஒரியா, வங்காளம் ஆகிய மொழிகளின் குறியீடுகளிலும் பின்பற்றப்பட்டிருக்கிறது.

இந்த விரிவாக்கமுறையை தேவநாகரி எப்படி பயன்படுத்தியிருக்கிறது என்பதை அதே பட்டியலில் அது சேர்த்துக்கொண்டுள்ள சில புதிய எழுத்துக்களைக் கொண்டு விளக்கமுடியும்.

திராவிட மொழிகளிலிருந்தும் குறிப்பாக தமிழில் இருந்தும் சில பிரத்யேக ஒலிகளை ஒலிபெயர்த்து எழுதுவதற்காக நிலவும் வரிவடிவங்கள் சிலவற்றின் கீழே புள்ளி ஒன்றை வைத்து அதை புதிய வரிவடிவமாக நீட்டித்துக்கொள்ளும் உத்தியை இந்த முறை பின்பற்றுகிறது. உதாரணம்: தேவநாகரியின் ரகர எழுத்துக்கு கீழே ஒரு புள்ளிவைத்து அதை தமிழ் வல்லின 'ற'வை ஒலிபெயர்ப்பதற்கான வரிவடிவம் என்று ISCII – II வரையறுத்திருக்கிறது. பட்டியலிலிருந்து:

**0931** DEVENAGARI LETTER LLLA (*for transcrbing Tamil alveolar r)

இதுபோலவே for transcribing Tamil alveolar n, for transcribing Tamil l என்று குறிப்பிட்டே மூன்று வரிவடிவங்களை சேர்த்துக் கொண்டிருக்கிறது. மேலும் திராவிட மொழிகளின் உயிர்க் குறில்களான எ, ஒ ஆகியவற்றை ஒலிபெயர்க்க இரு கூடுதல் வரிவடிவங்களையும் அது சேர்த்துக்கொண்டிருக்கிறது.

தேவநாகரிக்கான யூனிகோட் ஏற்கப்பட்டுள்ள இந்த மாற்றங்களுக்கு பின்னுள்ள அணுகுமுறை பாராட்டத்தக்கது. எளிதில் மற்றமொழிகளிலும் பின்பற்றத்தக்கது. இதே அடிப்படையில் தமிழ் யூனிகோட் குறியீட்டிலும் ஒரு கூடுதல் குறியீட்டை சேர்த்து புதிய வரிவடிங்களை சேர்க்கவழிசெய்யலாம்.

## முடிவுரையாக

மீண்டும் ஒரு எடுத்துக்காட்டை சுட்டிக்காட்டலாம் என்று தோன்றுகிறது. பல்லாயிரக்கணக்கான கருத்தெழுத்துக்களையும் (ideographs) ஹிரகானா, கடகானா என்று இரு வேறுபட்ட ஒலிப்பியல் நெடுங்கணக்கையும் ஒருசேர பின்பற்றும் ஜப்பானிய மொழியும் கூட, அந்நிய மொழிகளிலிருந்து ஒலிபெயர்க்க நேரிடும்போது துல்லியமாக செய்யவேண்டும் என்பதற்காக கடகானா எழுத்துக்கள் சிலவற்றை நீட்டித்து சுமார் 20 புதிய வரிவடிவங்களை உருவாக்கிக்கொண்டது. ஜப்பானிய மொழியின் அல்லது இந்தியின் அணுகுமுறை இந்த வகையில் முற்போக்கானது. காலத்தை ஒட்டியது. இது வளரும் மொழிகளுக்கான அடையாளம்.

இந்த விதி தமிழுக்கும் பொருந்தும். நம்மிடமே அதற்கு முன்னுதாரணம் இருப்பதையும் முன்பே பார்த்தோம். இப்போது சற்று கூடுதலான வரிவடிவ தேவைகளை நிரப்பவேண்டிய தருணத்தில் உள்ளோம். தற்போதுள்ள தமிழ்நெடுங்கணக்கில் புதிய வரவுகளாக இவற்றை இந்த ஆய்வுரை முன்மொழிந்தாலும் விருப்பத்தின் அடிப்படையில் இவற்றை பயன்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாவது அளிக்கப்படலாம்.

இதுகுறித்து விரைந்து விவாதித்து துணிந்து முடிவெடுத்து அவற்றையும் தரப்படுத்திவிட்டால் அது தமிழுக்கு கூடுதல் பலத்தை தரும் என்பதை தொழில்முறை மொழிபெயர்ப்பாளன் என்கிற என் சொந்த அனுபத்திலிருந்து நிச்சயம் அடித்துச் சொல்லமுடியும்.

## Selective Bibliography


1. The Unicode Standard, Version 2. The Unicode Consortium
2. ISCII and Tamil – A Perspective. By N. Anbarasan, paper presented in TamilNet 97 Conference.
3. பேச்சொலியியல், சி.சுப்பிரமணியன், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, 1998.
4. பொது மொழியியல், டாக்டர். பொற்கோ, பூம்பொழில், 1997.
5. அறிவியல் தமிழ், டாக்டர். வா.செ. குழந்தைசாமி, பாரதி பதிப்பகம், 1985.

*SECTION - III*

# Use of Tamil in Multimedia Internet and Computing

# A TAMIL SPEECH SYNTHESIS SYSTEM

*Ramakrishnan, A. G., Department of Electrical Engineering, Indian Institute of Science, Bangalore 560 012.*
*and*
*V. Karthigeyan, Ncore Systems, Bangalore*

**Abstract**

*This paper describes the development of a limited vocabulary, preliminary speech synthesis system for Tamil, incorporating some rules representing the knowledge sources. A speech synthesis system has many applications, such as natural language interface for computers, multimedia education packages in Tamil, automatic telephone-based enquiry systems in Tamil Nadu Government organisations, audio on-line help in Tamil based IT software, Virtual teacher on CD ROM/ Internet, computer based Tamil teaching, automatic document reading machines in Tamil for the blind, speech output in Government Online projects (such as that proposed with World Tel), and intelligent toys/ multimedia aids for children. Speech synthesis involves synthesizing intelligible and natural-like speech from text in coded form (ISCII or unicode). This involves two major phases (i) the text analysis phase and (ii) the speech synthesis phase. The text analysis phase parses the input text into a sequence of basic units of speech. The speech synthesis phase involves the concatenation of the parameters of these units and synthesis, after the application of both segmental and suprasegmental rules for naturalness. Since Tamil is phonetic in nature, characters are chosen as the appropriate basic units. Acoustic parameters such as linear prediction coefficients, formant frequencies, bandwidths, pitch and gain are prestored for the basic speech sound units corresponding to the orthographic characters of Tamil. The parameters are concatenated based on the input text for synthesizing speech. In order for the synthesized speech to appear natural, we need to adequately model the various features of natural speech, such as coarticulation, intonation and duration. These knowledge sources are stored in the form of rules. Coarticulation rules specify the pattern of joining the basic units. Intonation rules specify the overall pitch contour for the utterance. Duration rules modify the duration of the basic units based on the linguistic context in which they occur.*

## Introduction

Speech synthesis involves synthesizing, intelligible and natural-like speech from unrestricted text of a language. Progress in speech synthesis has been made possible by advances in linguistic theory, acoustic-phonetic charecterisation of sound patterns, mathematical modelling of speech production, structured programming and computer hardware design. Potential Applications of a speech synthesis system in Tamil include

1. Natural language interface for computers
2. Self-learning multimedia education packages in Tamil
3. Automatic telephone-based enquiry systems in all Tamil Nadu Government organisations
4. Audio on-line help in (futuristic, but positively feasible) Tamil based IT software
5. Virtual teacher on CD ROM/ Internet (for distance learning/ Open Universities)
6. Computer based Tamil teaching (speaking books, multimedia dictionaries)
7. Text to speech in Tamil and voice mail
8. Automatic document reading machines in Tamil for the blind

9. Learning IT in Tamil

10. Speech Output in Government Online projects (such as that proposed with World Tel)

11. Intelligent teaching toys/ multimedia aids for children.

Developing a complete speech synthesis system requires proper insight into the human speech production mechanism and knowledge of the perceptual significance of various acoustic parameters of the speech model. The major issues in the design of a speech synthesis system are the following:

? Choice of an appropriate speech synthesis model.
? Collection of data required for segmental synthesis.
? Acquisition, representation and incorporation of various knowledge sources that account for the naturalness of speech.

The common approaches followed for speech synthesis are :

? Concatenation method.
? Synthesis by rule method.

The concatenation method involves collecting and storing the basic units of speech [O' Shaugnessy 1984, Lukaszewicz et al 1987]. The basic units in the text to be synthesized are identified and the stored basic units are concatenated to get the speech output. In synthesis by rule method, a set of rules operate on the given text to produce a parameter sequence which is then synthesized. The rules are for the generation of basic speech units (acoustic -phonetic knowledge) and for the naturalness of the synthesized speech (Allen 1976).

## Materials and Methods

Characters are more compact than phonemes, but their sounds vary with the place of occurrence in a word, especially for non-phonetic languages. Whereas for phonetic languages, each character has a unique script and pronunciation. Since Tamil is phonetic in nature, character could be an appropriate choice as basic unit, which we have choosen. A character in Tamil can be any one of (i) consonant-vowel sequence (CV) (ii) consonant alone (C) (iii) vowel alone (V). Cluster characters such as CCV and CCCV etc can be generated by combining appropriate Cs and a CV. The other advantages in choosing the character as the basic unit are

? The number of characters are not so large (around 250 in Tamil).
? Consonant to vowel transitions are preserved in the characters itself.
? characters have a more natural pronunciation than the phonemes, diphones, etc.

## Model of speech production

Speech sounds are produced as a result of acoustic excitation of the human vocal tract. When the vocal tract is excited by a series of nearly periodic pulses generated by the vocal cords, the sounds produced are termed as voiced sounds. All the vowels come under this category. When the excitation is produced by air passing turbulently through constrictions on the vocal tract, the sounds produced are called unvoiced. The consonants like \pa\ & \sa\ come under this category. The speech production model has been developed with an assumption that the variations in the vocal tract shape with time can be approximated with sufficient accuracy by a succession of stationary shapes. These set of stationary shapes of the vocal tract are modelled as discrete time varying digital filters. With this basic idea of speech production model, the various acoustic parameters can be understood well. The acoustic parameters and their relation to the human speech production model are described below.

? Pitch : It is the fundamental frequency, $F_0$ of the vocal cords. The typical values are 50-200 Hz for men, 150-300 Hz for women and 200-400 Hz for children.

? Formants : These are the resonant frequencies of the vocal tract. Their values depend on what is uttered. Only the first three formant frequencies are perceptually significant and they lie below 3000 Hz.

? Bandwidths : Bandwidths determine the concentration and distribution of energy near the formant frequencies in the spectra of the signal.

? LPC : These are the linear predictive coefficients, i.e, filter coefficients of the all-pole model of the vocal tract.

? Gain : Energy of vibration of the vocal cord.

## Construction of the basic unit database

The basic unit data base has to be developed with great care as the quality of the synthetic speech predominantly depends on the quality of the basic units. Certain guidelines need to be followed in developing the database. They are as follows.

? The basic speech unit has to be embedded in some carrier word which needs to be meaningless in order to avoid any prosodic bias.

? The carrier word should be so chosen that the basic unit of interest is easily separable from it. The motivation behind extracting the basic units from some carrier word rather than uttering it in isolation is that, we can use the duration of the basic unit extracted from the carrier word as the default length for synthesis. The carrier words recorded are digitized at a sampling rate of 10 KHz. Waveforms of the basic speech units are carefully separated from the carrier words using an interactive audio editor package, Goldwave.

## Pitch extraction

We have used the simplified inverse filtering technique (SIFT)} for pitch extraction (Markel 1972). The speech waveform s(t) is first filtered by a lowpass filter with a cut-off at 0.8 KHz. After sampling the filter output at 2 kHz, the first five terms of the short term autocorrelation sequence are calculated for an appropriate input length (corresponding to 32 msec) of data. Then a set of linear equations are solved for inverse filter coefficients $a_i$. Knowing $a_i$, the inverse filter output $y_n$ can be calculated. The output autocorrelation sequence $r_n$ is then calculated as the autocorrelation sequence of $y_n$. After $r_n$ is obtained, the largest peak within specified limits is found. If the peak is above a threshold (0.4), then that frame is classified as voiced and the reciprocal of the location of the peak is the pitch, $F_0$. If the peak is less than the threshold, the corresponding frame is classified as unvoiced, with $F_0 = 0$. The advantage of the SIFT algorithm over other algorithms is that, the voiced and the unvoiced regions are satisfactorily classified with the same threshold for all the frames.

## Linear prediction coefficients and Gain computation

We have used the Levison-Durbin's recursion algorithm to extract the linear prediction coefficients and gain for each frame of the data. Linear prediction synthesis There are two parametric models of speech synthesis. They are
? The linear prediction synthesis.
? The formant synthesis.

The linear prediction (LP) method (Makhoul, 1975) is based on the speech production model, where the vocal tract is modelled as an all-pole digital filter of order 'p' and gain, G. Here, every speech sample is computed as the linear combination of a certain no of previous speech samples and a sample of the excitation signal. The advantages of the LP model are the following: ? It can represent fairly well most of the speech sounds except nasals and voiced fricatives. ? Efficient methods for automatic extraction of linear prediction coefficients are available. The disadvantages are the following: ? It cannot model zeros in the speech spectrum and hence it does not model speech sounds like nasals satisfactorily. ? It is very rigid against spectral level modification. Because of these disadvantages, adjustments of peak frequencies (formants) in the spectrum are not possible. The second disadvantage is very severe making it impossible to incorporate the knowledge due to coarticulation which modify the spectral peaks contextually. The formant synthesis requires the estimation of bandwidths from the spectrogram of the signal. The spectrogram required for the accurate measurement of bandwidth should be of very good resolution. Since we do not have the necessary equipment to get a very good resolution spectrogram, we could not use the formant synthesis.

## Excitation source

The quality of the synthetic speech generated by these parametric models depends on the excitation signal used as input. The excitation signal should be such that its spectrum is white. This is because, it is easier to shape the white spectrum according to a model, compared to a colored spectrum. Based on the type of the sound to be synthesized, the excitation signal should be either a white noise sequence (for unvoiced sounds) or periodic pulses a pitch period apart (for voiced sounds). We have used the Fant's excitation model for excitation signal generation (Childers, 19). In this model, the energy is distributed over one pitch period. Hence the synthesized speech obtained using this type of excitation is significantly better compared to the speech generated using impulse excitation. The parameters of the model are T1 =50% of pitch period and T2 =12% of pitch period.

## Knowledge sources for naturalness

Mere concatenation of the signals corresponding to the basic units of speech does not produce intelligible and natural sounding speech. To produce speech from a given text, human beings use several knowledge sources such as phonetics, phonology, morphology, syntax, semantics and pragmatics (V.R. Ramachandran, 1991). It is necessary to incorporate these knowledge sources in a suitable form in the system to accomplish the same task. Human speech is characterised by segmental and suprasegmental features which collectively contribute to the naturalness of speech. A segment refers to some small chosen unit of speech (eg phonemes, syllables etc). Segmental features refer to those which decide the phonetic quality of the segment. Suprasegmental or prosodic features have their domain extended over more than one segment. The suprasegmental features are influenced by factors such as phonetic and syntactic context, semantics and emotional state of the speaker. In continuous speech, the segmental features are subjected to changes decided by phonetic context. These changes are caused by the coarticulation effect and give rise to certain joining patterns between adjacent speech units. One needs to acquire the knowledge pertaining to these features from natural speech. Their incorporation into the system makes the synthesized speech sound intelligible and natural. Some of the knowledge sources identified here are coarticulation, intonation and duration.

## Intonation in Tamil

With the knowledge of the general declining tendency of the pitch contour of declarative sentences (A.S.Madhukumar et al,1991), we have developed a model to synthesize intonation pattern for simple declarative sentences. The model is developed based on the observations from a set of 25 declarative sentences read out by an adult, male, native speaker of Tamil. The model assumes that ? F_0 for any simple declarative sentence fluctuates between two abstract lines, a base line and a top line. ? The top line is determined by the value of the first peak of the first word and the last peak of the last word of the sentence.

? The base line is determined by the valley following the first peak of the first word and the valley of the final word of the sentence.

? The intonation contour is charectarized by the local falls and rises of F_0 based on the stress on the words of the sentence.

The F_0 values of the valleys and the peaks in each word are computed from the corresponding values taken from the base line and the top line respectively. The intonation knowledge modifies the default pitch values of the basic units. The nature of the underlying sentence (declarative, interrogative, yes/no type, etc.) is determined and based on that, the corresponding intonation is provided to the pitch contour, prior to synthesizing.

## Incorporation of duration knowledge

Studies have been made to determine the change of duration of the basic units in different contexts (B.Yegnanarayana, 1994). From these studies, rules are formulated to modify the duration of the basic units during synthesis, depending on the context in the input text. Some of the rules are the following.

? Positional effect: The duration of a character at the beginning of a word is increased by 10% and that at the final position, is increased by 30%.

? Prepausal lengthening effect: The duration of a character appearing before a pause is increased. If the pause is due to a punctuation like comma, then the final character of the word preceding the pause is increased by 35\%. If the pause is due to sentence ending, then the increase will be by 35\%. If the pause is due to any other syntactic boundary, then the duration of the character will be increased by 30%.

The base duration, D_0, of the basic unit is taken from the carrier word. Since the carrier word is spoken in isolation, the actual base duration in continuous speech is about 70% of the corresponding D_0. Therefore, the actual base duration, D for each basic unit is taken to be 70% of D_0. Now, depending upon the context of each basic unit, various rules may be applied. Each of these modifies the base duration, D for that particular unit using the expression D_{final} =D +alpha*D/100 where alpha is the percentage value specified in each rule. The basic units are synthesized for D_{final} duration. The duration knowledge does not modify any of the other parameters used for synthesis.

## Conclusion

The present speech synthesis system for TtS conversion in Tamil is successful in generating all vowels, all CV units except those that have the consonants \r/, \v/ & \p/. The consonants have not been synthesized properly owing to their very short duration. Words without consonants have been synthesized with a reasonable amount of intelligibility using the present speech synthesis system. Attempts have also been made to synthesize some declarative sentences. Proper pitch contour has been provided to the declarative sentences synthesized, in order to give proper intonation.

The main contributions of this work are the following:

1. The basic units of speech that are suitable for speech synthesis in the context of TtS conversion are collected from natural speech.
2. Some knowledge sources that account for the naturalness of speech are identified and acquired.
3. A representation scheme is proposed for the basic speech units which is flexible enough to allow incorporation of the knowledge sources.
4. Demonstration of a limited vocabulary speech synthesis system for a TtS conversion system in Tamil, incorporating some of the rules that represent the knowledge sources.

Text to Speech conversion has been one of the focus areas of research for the speech scientists for over three decades. Currently available TtS conversion systems in English, that are capable of producing highly intelligible speech, are the result of this research. The foci of research have only been English, French, German and Hindi. As far as our knowledge goes, no work has been done in developing a TtS conversion system for Tamil. So, this is the first attempt in this direction.

## References


1. B. Yegnanarayana, "Formant Extraction from linear-prediction phase spectra," J. Acoust. Soc. Am., Vol. 63, No. 5, pp. 1638-1640, May 1978.
2. Hema A. Murthy and B. Yegnanarayana, "Speech processing using group delay functions," Signal Processing, Vol. 22, pp. 259-267, 1991.
3. Dennis H. Klatt, "Review of text-to-speech conversion for English," J. Acoust. Soc. Am., Vol. 82, No. 3, pp. 737-793, May 1987.
4. B. Yegnanarayana, S. Rajendran, V. R. Ramachandran and A. S. Madhukumar, "Significance of knowledge sources for a text-to-speech system for Indian languages," Sadhana, Vol. 19, Part 1, pp. 147-169, Feb. 1994.
5. Eric Moulines and Francis Charpentier, "Pitch-synchronous waveform processing techniques for text-to-speech synthesis using diphones," Speech Communication, Vol.9, pp. 453-467, 1990.
6. Francis Charpentier and Eric Moulines, "Text-to-speech algorithms based on FFT synthesis," Proc. ICASSP'88, pp. 667-670, 1988.
7. Bishnu S. Atal and Nancy David, "On synthesing natural-sounding speech by linear prediction," Proc. ICASSP'79, pp. 44-47.

8. S. E. G. Ohman, "Coarticulation in VCV utterances: spectrographic measurements," pp. 151-168, 1965.

9. A. S. Madhukumar, S. Rajendran, and B. Yegnanarayana, "Intonation component of a text-to-speech system for Hindi," Computer Speech and Language, Vol. 7, pp. 283-301, 1993.

10. Andrew Varga and Frank Fallside, "A technique for using multipulse linear predictive speech synthesis in text-to-speech type systems," Proc. ICASSP'87, pp. 586-587.

11. D. G. Childers and H. T. Hu, "Speech synthesis by glottal excited linear prediction," J. Acoust. Soc. Am., Vol. 96, No. 4, pp. 2026-2036, Oct. 1994.

12. N. Yiourgalis and G. Kokkinakis, "A TtS system for the Greek language based on concatenation of formant coded segments," Speech communication, Vol. 19, pp. 21-38, 1996.

13. Jonathan Allen, "Synthesis of speech from unrestricted text," Proc. IEEE, Vol. 64, No. 4, pp. 433-442, Apr. 1976.

14. J. D. Markel and A. H. Gray, "A linear prediction vocoder simulation based upon the autocorrelation method," IEEE Trans. ASSP, Vol. No. pp. 124-134, Apr. 1974.

15. D. H. Klatt, "Software for a cascade/ parallel formant synthesizer," J. Acous. Soc. Am., Vol. 67, No. 3, pp. 971-995, 1980.

16. B. S. Atal and S. L. Hanauer, "Speech analysis and synthesis by linear prediction of the speech wave," J. Acous. Soc. Am., Vol. 67, No. 3, pp. 637-655, 1971.

17. J. D. Markel, "Digital inverse filtering - a new tool for formant trajectory estimation," IEEE Trans. Audio, Electroacoust., Vol. 20, No. 2, pp. 129-137, June 1972.

18. Noriko Umeda, "Linguistic rules for Text-to-Speech synthesis," Proc. IEEE, Vol. 64, No. 4, pp. 443-451, Apr. 1976.

19. J. D. Markel, "The SIFT algorithm for fundamental frequency estimation," IEEE Trans. Audio, Electroacoust., Vol. 20, No. 5, pp. 367-377, 1972.

20. J. P. Olive, "Mixed spectral representaion-formants and linear predictive coding, J. Acoust. Soc. Am., Vol. 92, No. 4, pp. 1837-1841, 1992.

# உலகளாவிய மின் வலையில் தமிழ்ப் பாடம்

அரங்க வாசு
துணை இயக்குனர், பென் மொழிகள் மையம்,
பென்சில்வேனியா பல்கலைக் கழகம், பிலடெல்பியா, (USA)

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்

—மகாகவி பாரதியார்

**கட்டுரைச் சுருக்கம்**

மின்வலையினை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்த இக்காலக்கட்டத்தில், இதன் மூலம் தமிழ் மொழிப் பாடங்களைக் கொடுப்பது மிகவும் எளிதான ஒன்றாக இருக்கிறது. குறிப்பாக தமிழ் கற்போரின் பேசும் திறன் மற்றும் எழுதும் திறனை அதிகரிக்கும் வகையில் பாடங்களை அமைத்துத் தருவதில் மின்வலைப் பக்கத்தை உருவாக்குவோர் கவனம் செலுத்தவேண்டும். மேலும், அயல் நாட்டில் தமிழ் கற்போருக்கு பேச்சுத்தமிழ் மற்றும் எழுத்துத் தமிழ் ஆகிய இரண்டு வகைத் தமிழின் வேறுபாட்டை விளக்கவேண்டியிருக்கிறது. இக்கட்டுரை மின்வலையில் கொடுக்கத் தகுந்த தமிழ்ப் பாடவகைகளையும் பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் மின்வலைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள தமிழ்ப் பாடங்களையும் பற்றி விளக்குகிறது.

## 0. முன்னுரை

பாரதியின் கனவு நனவாக உலகம் முழுதும் தமிழர்கள் வாழ்ந்து வளர்ந்து நமது தமிழ் மொழிக்கும் தமிழ்க் குலத்துக்கும் பெருமை சேர்த்து வருகிறார்கள். தமிழர்கள இல்லாத நாட்டினை விரல் விட்டு எண்ணிவிடுகின்ற அளவுக்கு அவர்கள் திரும்பிப்பார்க்கும் திசையிலெல்லாம் இருக்கிறார்கள். தமிழகத்தில் வாழும் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுக்கொடுப்பதில் சிரமமேதும் இல்லை. ஆனால் மேலை நாடுகளில் வாழும் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுத் தருவது என்பது சற்றுக் கடினமான செயலாகும். இதற்கு முக்கிய காரணம் இவர்கள் தமிழ் மொழியை இரண்டாவது மொழியாகக் கற்றுக்கொள்கிற சூழ்நிலைக்கு உள்ளாகிறார்கள். தமிழ் மொழியை இரண்டாம் மொழியாக கற்றுத் தருவதற்கான பாட நூல்களும் வசதிகளும் நிறைய இருக்கின்றன என்று சொல்லிக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். உலகலாவிய மின்வலை பெருகிவிட்ட இச்சூழ்நிலையில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்றுக்கொடுப்பதற்கான வசதிகள் மிகவும் வளர்ந்திருக்கிறது.

இக்கட்டுரை மின்வலை மூலம் தமிழ் கற்றுக்கொடுப்பதன் வசதிகளையும், பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் மின்வலைப் பக்கத்தைப் பற்றியும் விளக்குகிறது[1]

## 1. மொழித் திறனும் மின்வலையின் பயன்பாடும்

மொழி கற்போரின் திறனை இரண்டு வகையாகப் பிரிக்கின்றனர். அவைகள்: 1) உள்நிலை அறிவு (passive knowledge), 2) செயல் நிலை அறிவு (active knowledge) என்பவையாகும். படித்தல் மற்றும் புரிந்துகொள்ளல் (reading and understanding) உள்நிலை அறிவாகும். பேசுதல் மற்றும் எழுதுதல் (speaking and writing) செயல் நிலை அறிவாகும். மேலை நாடுகளில் வளர்ந்து வரும் தமிழ் குழந்தைகளுக்கு உள்நிலை அறிவைப் பெறுவதில் எந்தவித பிரச்சினையும் இருப்பதில்லை. பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் வீட்டில் பேசுவதன் மூலம் அவர்களால் தமிழை மிக நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது. சிறிது முயற்சிக்குப் பின் அவர்களால் தமிழ் எழுத்தைப் புரிந்துகொண்டு மிக நன்றாகப் படிக்கவும் முடிகிறது. ஆனால் அவர்களுக்குச் செயல் நிலை அறிவான பேசும் திறனையும் எழுதும் திறனையும் புகட்டுவதில் மிகுந்த சிரத்தை எடுக்க வேண்டியிருக்கிறது. இதற்கு முக்கியக் காரணம் இவர்கள் தாங்கள் வகுப்பில் கற்றுக்கொள்ளும் பாடங்களை பெற்றோர்களிடம் மட்டும்தான் பேசிப் பழக வாய்ப்பிருக்கிறது. தாய், தந்தை இருவரைக் கொண்டு தமிழைச் சரளமாகப் பேசக் கற்றுக்கொள்ள முடியும் என்பது இயலாத ஒன்றாகும். எழுதும் திறனைப் பெறுவதற்கும் அவர்கள் இடைவிடாத முயற்சி செய்ய வேண்டியுள்ளது. இதற்கெல்லாம் இடையூறாக அவர்கள் கற்றுக்கொண்ட முதல் மொழி குறுக்கே நிற்கிறது. அவர்களால் எந்தச் சூழலிலும் முதல் மொழியைக் கொண்டு சிறப்பாக இயங்க முடிகிற நிலையில் தமிழ் மொழி இடைச் செறுகலாகவே அவர்களுக்குத் தோன்றுகிறது.

## 2. மேலை நாடுகளில் தமிழறிவு

தமிழர்கள் உலகம் முழுவதும் பரவிவிட்ட இந்த நிலையில் தமிழ் மொழியும் அந்த அளவிற்கு வளர்ந்து வருகிறதா என்ற வினா எழுப்பின், இல்லை என்றே சொல்லத் தோன்றுகிறது. மேலை நாடுகளில் வாழும் தமிழ்ச் சந்ததியினரின் தமிழறிவு பெருமளவில் குறைந்து காணப்படுகிறது. பெரும்பாலான தமிழ்க் குழந்தைகள் தமிழை இரண்டாவது மொழியாகவே கற்கின்றனர்.

[1] உங்கள் மின்வலையை அலசும் கனிமத்தைக் கொண்டு http://ccat.sas.upenn.edu/plc/tamilweb/ என்ற பக்கத்தைத் தயவுசெய்து நோக்குங்கள்.

அமெரிக்காவைப் பொறுத்த வரையில் யாராவது ஒரு ஏழு வயது தமிழ்ப் பையன் தமிழ் பேசினால், அதைப் பார்க்கிற மற்றத் தமிழ்ப் பையன்களுக்கு அது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. Mom! look! He speaks Tamil! என்று கூறி ஆச்சரியப்படுகிறான். இங்கே வசிக்கிற தமிழ்க் குழந்தைகள் சனிக்கிழமையிலோ ஞாயிற்றுக் கிழமையிலோ பெற்றோர்களின் முயற்சியால் நடத்தப்படும் மரத்தடிப் பள்ளி போன்ற வகுப்புக்களில் விளையாட்டாகத் தமிழ் கற்கின்றனர். அவர்கள் கல்லூரிக்கு வரும் போது ஒரு சில பல்கலைக் கழகங்களில் நடத்தப்படும் Tamil 230, Tamil 231 என்று எண்கள் கொடுக்கப்பட்ட தமிழ் வகுப்புகளில் சேர்ந்து நாளுக்கு ஒரு மணி நேரம் விதம் ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்குத் தமிழ் பயின்று பாட்டிக்கும் தாத்தாவுக்கும் தமிழில் கடிதம் எழுதிப் பெருமைப் படுகின்றனர். இவர்களுக்குத் தங்களின் தாயைப் போலவோ தந்தையைப் போலவோ தமிழ் பேசமுடியவில்லையே என்ற ஆதங்கம் இருந்து வருகிறது. அங்கங்கே ஒரு சில மாணவர்கள் தங்களின் இடைவிடாத முயற்சியில் தாங்களாகவே புத்தகத்தையும், கணிப் பொறியையும் பயன்படுத்தி தமிழை நன்றாகப் பயின்று வருகின்றனர். எது எப்படி இருப்பினும் நாமெல்லாம் பருகி மகிழும் தேமதுரத் தேனாகிய இலக்கியத் தமிழை இவர்கள் பருகிக் களிக்க வேண்டுமானால் பெற்றோர்களின் கடும் உழைப்பும் கல்வியாளர்களின் அயராத ஒத்துழைப்பும் மிகவும் அவசியம்.

### 3. பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும்

இரண்டாவது மொழியாகத் தமிழ் மொழியினைக் கற்போருக்குப் பேசவும் எழுதவும் தேவையான அறிவைப் புகட்டுவதே முக்கியக் குறிக்கோளாக அமைகிறது. தமிழ் நாட்டில் தமிழ் படிக்கும் மாணவர்களுக்குப் பேசும் திறனைப் புகட்டவேடியதில்லை ஏனெனில் அது மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுப்பது போலாகும். மற்ற மொழிகள் போல் தமிழ் மொழி இல்லை. நாம் பேசுவது ஒரு மாதிரி எழுதுவது ஒரு மாதிரி. அதோடு, அப்பாவிடம் பேசுவது ஒரு மாதிரி ஆசிரியரிடம் பேசுவது ஒரு மாதிரியான இரட்டை வழக்கு (Diglossia) நிலை. மேலை நாடுகளில் குறிப்பாக அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் தமிழ் படிக்கும் தமிழ் மாணவர்களுக்குப் பேச்சுத் தமிழைச் சொல்லிக்கொடுப்பது மிகவும் அவசியமானதாக இருக்கிறது. ஏனெனில் இவர்களுக்கு சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் போல் அல்லாது தமிழ் பேசுவதற்கான சூழ்நிலைகள் அவ்வளவாகக் கிடைப்பதில்லை. பென்சில்வேனியாப் பலகலைக் கழகத்தின் தமிழ் வலைப் பக்கம் மூலம் கொடுக்கப் படும்

பேச்சுத் தமிழுக்கான பாடம் ஒன்றை சிங்கப்பூரில் நடந்த கருத்தருங்கில் விளக்கிக் கொண்டிருந்த போது ஏற்பட்ட சம்பவம் ஒன்றை இங்கு குறிப்பிடுகிறேன். பின்வரும் தொடர் போன்று வரும் பேச்சுத் தமிழ் கொண்ட ரேடியோ நாடகத்தின் பகுதிகளை எங்கள் மின்வலையில் கொடுத்திருக்கிறோம்.

" அப்பாப்பா! அந்த ஆளு ஒங்களெ பாத்துட்டாருப்பா. கையெக்கூட ஆட்டுறாருப்பா! பாருப்பா!"

"அடப் பாவி மனுஷா! பாத்திட்டானா இனிமே ஓடினா பிரயோசனம் இல்லெ. உம்.. இன்னெக்கி யாரு மொகத்துலெ முழிச்சேனோ!..."

இம்மாதிரியான தமிழை மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதில் தனக்குரிய அதிருப்தியை ஒரு சிங்கப்பூரில் வாழும் தமிழ் ஆசிரியர் வெளிப்படுத்தினார். இந்தப் பகுதியினை நாங்கள் மூன்றாம் நிலையிலான (Advanced Tamil) மாணவர்களுக்குக் கொடுக்கிறோம். இதில் உள்ள "பாவி மனுஷின்", "யார் முகத்தில் முழிச்சேனோ" போன்ற வழக்குத் தொடர்களைக் கற்பிப்பதன் மூலம் தமிழ் மொழியை மட்டுமல்லாது அவர்களுக்கு தமிழர்களின் பழக்கவழக்கங்கள் மற்றும் பண்பாடு ஆகியவற்றையும் கற்பிக்க வசதியாக இருக்கும். இது எந்த வகையிலும் மாணவர்களுக்கு பொருந்தாத ஒன்று என்று வாதிட முடியாது. பெரும்பாலோர் தமிழ் வகுப்பு என்றால் மாணவர்களுக்கு இலக்கியத் தமிழைத் தான் சொல்லிக்கொடுக்கவேண்டும் என்ற தவறான எண்ணத்தைக் கொண்டுள்ளனர். இது தமிழ்நாட்டில் வாழும் குழந்தைகளைப் பொறுத்த வரையில் சரியாக இருக்கலாம் ஆனால் மேலை நாடுகளில் வாழும் குழந்தைகளுக்குப் பொருந்தாத ஒன்றாக இருக்கும். எழுத்துத் தமிழை மட்டுமே இவர்களுக்குக் கற்றுக் கொடுத்தால் சென்னையில் வந்து இறங்கியவுடன் நமது மாணவர்கள்:

இங்கிருந்து வள்ளுவர்கோட்டத்துக்கு எப்படி போவது என்று நீங்கள் தயவுசெய்து எனக்கு வழிசொல்கிறீர்களா?

என்று ரிக்ஷா ஓட்டுனரிடம் கேட்பார்கள்.

இங்கேருந்து வள்ளுவர்கோட்டத்துக்கு எப்படிப் போறதுண்ணு நீங்க கொஞ்சம் எனக்கு வழி சொல்றீங்களா?

என்ற பேச்சுத்தமிழ் வாக்கியங்களை மேலை நாடுகளில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு சொல்லிக்கொடுக்கவேண்டியிருக்கிறது. ''படித்துக்கொண்டிருக்கிறேன்'' என்று எழுதவேண்டும். ''படிச்சிக்கிட்ருக்கேன்'' என்று சொல்லவேண்டும்; எடுத்துக்கொள்வேன் என்று எழுதவேண்டும் எடுத்துப்பேன் என்று சொல்லவேண்டும் என்பது போன்ற எழுத்துத் தமிழுக்கும் பேச்சுத்தமிழுக்கும் இடையிலான வேறுபாடுக்களை அவர்களுக்கு சொல்லிக்கொடுப்பது மிகவும் அவசியமாகிறது. இந்த வகையில் பிரஞ்சு, ஸ்பானிஷ் போன்ற மற்ற மொழிகள் தமிழ் போல் இல்லாமல் கற்றுக்கொள்வதற்குச் சுலபாகவே இருக்கும். மேலும் இந்தவகைப் பாடங்கள் தமிழ்நாடு மற்றும் இலங்கை போன்ற இடங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்குச் சொல்லித்தர வேண்டிய அவசியம் ஏதும் இல்லை.

## 4. மின்வலையில் தமிழ்ப் பாடங்கள்

மின்வலையின் வசதிகள் பெருகிவிட்ட இந்தக் காலக் கட்டத்தில் இது மாதிரியான கடினமான பாடங்களையும் சிறந்த முறையில் கற்றுக் கொடுப்பது மிகவும் எளிதான ஒன்றாக இருக்கிறது. ஒலி, படங்கள், ஒலிப்படங்கள், தேர்வு கொடுப்பதற்கான வழிவகைகள் முதலான கொண்ட தமிழ்ப்பாடங்களை மின்வலை மூலம் அமைத்துத் தருவது மிகவும் எளிதான ஒன்றாக இருக்கிறது. பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தின் தமிழ் வலைப் பகுதி மூலம் தமிழ் எழுத்துக்களை எப்படி எழுதுவது, தமிழ் சொற்களை எப்படி அமைப்பது போன்ற இளநிலை தமிழ்ப் பாடங்கள் முதல் எவ்வாறு தமிழ் பேசுவது, தமிழில் உள்ள வழக்குத் தொடர்கள் முதலான முதுநிலைத் தமிழ்ப் பாடங்கள் வரை பல பாடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இத்தோடு பேராசிரியர் ஹெரால்டு ஷிப்மேன் அவர்களது பேச்சுத் தமிழ் இலக்கணம் முழுவதையும் சுலபமாகப் படிக்கும் வகையில் மின்வலையில் கொடுத்திருக்கிறோம். இவ்விலக்கண நூல் எழுத்துத் தமிழிலிருந்து பேச்சுத் தமிழுக்கு வாக்கியங்களையும் சொற்களையும் மாற்றுவதற்கான விதிகளை வரிசைப் படுத்துகிறது. மேலும் Conversational exchanges என்ற பக்கத்தில் பேச்சுத் தமிழ் வாக்கியங்களையும் அவற்றுக்கு ஈடான எழுத்துத் தமிழ் வாக்கியங்களையும் உடனுக்குடன் மாற்றுவதற்கும் அவற்றை ஒலிவாங்கி மூலம் கேட்பதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வலையில் உள்ள பாடங்கள் பின்வருமாறு வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.

**இள நிலைத் தமிழ்ப் பாடங்கள்**

(Elementary Materials)

தமிழ் எழுத்துக்களை எழுத மற்றும் கேட்க வசதி

சொற்களை அமைக்கப் பயிற்சி

உறவு முறைச் சொற்களை மனதில் இருத்திக்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்ட பாடங்கள்

எளிய வாக்கியங்களை அமைக்கப் பாடங்கள்

**இடைநிலைத் தமிழ்ப் பாடங்கள்**

(Intermediate Materials)

படிக்கும் திறனை வளர்த்துக்கொள்ளும் வகையில் பாடங்கள் மற்றும் அதற்கான தேர்வு வினாக்கள்

(Reading Literary Tamil)

இலக்கணப் பாடங்கள்

(Grammatical Modules)

தமிழ் வினைவகைகள் மற்றும் அவற்றின் வெவ்வேறு அமைப்பு முறைகள்

தமிழ்ச் சொற்களை மனதில் இருத்திக்கொள்ளும் வகையில் அமைக்கப் பட்ட பாடங்கள்

(Vocabulary Acquisition and Review.)

எழுத்துத் தமிழும் பேச்சுத் தமிழும்

(Writing Tamil: differences between Spoken and Written)

**முதுநிலைத் தமிழ்**

(Advanced Spoken and Written Tamil)

திருச்சி வானொலியில் ஒலிபரப்பப் பட்ட சில நாடகங்கள் (படிக்க, கேட்க, மற்றும் மொழிபெயர்ப்பைத் தெரிந்து கொள்ளும் வகையில் அமைக்கப் பட்ட பாடங்கள்).

தமிழ் நாவல்கள் (படங்கள், ஒலி முதலியன கொண்ட பாடங்கள்)

சீர்காழி கோவிந்தராஜன் பாடல்கள் (பாடல்களை படித்துக்கொண்டே கேட்க வசதியுடன்)

இந்தப் பாடங்கள் மாணவர்கள் தங்களது பேசும் திறனையும் எழுதும் திறனையும் வளர்த்துக்கொள்ளும் வகையில் அமைக்கப் பட்டுள்ளன. இருப்பினும் மின்வலை மூலம் மொழியின் எல்லா அறிவையும் புகட்டிவிடமுடியும் என்று கூறமுடியாது. குறிப்பாக மாணவர்களது பேச்சு மற்றும் வாக்கியங்களைச் சரிப்படுத்தப் போதுமான வாய்ப்புக்கள்

மின்வலையில் இல்லை. இந்த வகையில் மின்வலைப் பாடங்களை ஒரு ஆசிரியரின் துணை கொண்டே முழுமையான அளவில் பயன்படுத்த முடியும்.

## 5. முடிவுரை

பென்சில்வேனியாப் பல்கலைக் கழக தமிழ் வலையில் புதிய பாடங்கள் கொடுக்கவும் ஒலிகளுடன் கூடிய தமிழ் - ஆங்கில அகராதியைக் கொடுக்கவும் வேலைகள் நடந்து வருகின்றன. மொழி கற்க மற்றும் சொல்லிக்கொடுப்பதற்கான கூட்டமைப்பு (Consortium for Language Learning and Teaching) மூலமும் மிகக் குறைவான அளவில் கற்பிக்கப் படும் மொழிகளுக்கான சங்கம் (Less Commonly Taught Languages) மூலமும் பென்சில்வேனியாப் பல்கலைக் கழக தமிழ் மின்வலையை செழுமைப் படுத்துவதற்காக நிதியுதவி கிடைத்துள்ள நிலையில் நாங்கள் வெவ்வேறு நாடுகளில் இருக்கும் தமிழாசிரியர்களிடமிருந்தும் தமிழறிஞர்களிடமிருந்தும் தமிழ்ப் பாடங்கள், சிறு கதைகள், நாவல்கள், ஒலி ஒளிப்படங்கள் (movies) போன்றவை குறித்தான உதவியை நாடுகிறோம். எங்களது தமிழ் வலைப் பக்கத்தை வளப்படுத்துவதில் ஆசிரியர்களின் உரிமைகள் குறித்தான பிரச்சினைகள் பெரும் தடையாக இருக்கிறது. குறிப்பாக இவற்றை எங்களது மின்வலையில் கொடுக்க ஆசிரியர்களிடமிருந்தும் தயாரிப்பாளர்களிடமிருந்தும் பூரண அனுமதி தேவைப் படுகிறது. மேலும் கணிப்பொறியில் தட்டச்சு செய்த பாடங்களோ நாவல்களோ தங்களிடம் இருப்பின் அதை எங்கள் மின்வலையில் சேர்க்கக் கொடுக்க முடியுமெனின் மிகவும் சிறப்புடைத்தாகும். இது குறித்து தாங்கள் எங்களை plc@ccat.sas.upenn.edu என்ற மின் அஞ்சலில் தொடர்பு கொள்ளலாம்.

**கட்டுரை ஆசிரியர் விவரம்:**

முனைவர். அரங்க வாசு R. Vasu

துணை இயக்குனர் (Assistant Director for Multimedia)

பென் மொழிகள் மையம் (Penn Language Center)

714 Williams Hall

பென்சில்வேனியாப் பல்கலைக் கழகம் (University of Pennsylvania)

பிலடெல்பியா, PA 19104 USA

**மின் அஞ்சல்:** vasur@sas.upenn.edu

**மின் வலை இல்ல முகவரி:** http://www.sas.upenn.edu/~vasur

# PROJECT MADURAI FOR E-TEXTS OF TAMIL LITERARY WORKS
## (Madurai Thamizh Ilakkiya Minthokupputh Thittam URL: http://www.tamil.net/projectmadurai/)

*Dr. K. Kalyanasundaram*
*Inst. of Physical Chemistry*
*Swiss Federal Inst. of Technology*
*CH-1015 Lausanne, Switzerland*

**Abstract**

*Project Madurai is an open, voluntary initiative devoted to electronic texts (ETexts) of Tamil literary works. This paper provides a broad overview of the working of this project, Etexts released in the first year of its existence and Etexts that are under preparation. Looking into the future, the paper also raises some of the key issues relating to Tamil EText archives that are to be sorted out, issues such as copyrights of very ancient works, standardization of file format and distribution modes, dedicated OCR for Tamil and an international registry for Tamil Etexts.*

## Introduction

Electronic versions of printed texts (abbreviated as ETexts) of literary works are important pedagogic and scholarly resources. Stored in easily accessible archives, they permit preservation and wider distribution of the literary works around the globe through the means of Internet. It is an elegant approach by which millions of Tamils and Tamil lovers worldwide can access Tamil literary classics right from their home and hence maintain close contact with their culture. With the stated goals of the Tamilnadu Govt. to provide Internet Booths all over Tamilnadu, millions of Tamils living in thousands of towns can also access to the Tamil Literature. Etexts of literary works also allow quick search for phrases, words, and combinations of words in any literary work. This in turn allows one to try out notions and hypotheses with great speed and encourage large-scale searches over oeuvres, genres, and centuries, which are difficult and time-consuming with printed texts alone. Also such work can be done remotely from one's home or office. Thus they facilitate enormously the work of researchers involved in the study of evolution of language and literature.

In this paper an attempt has been made to bring out the usefulness of the multimedia towards learning of a school language which is diglossic in nature. It may be mentioned that the material preparation for this multimedia concentrates towards the learning of school language keeping in mind the linguistic difference between the home dialect and school language (written Tamil). In other words, it may be mentioned that, spoken Tamil material is not utilised from which switch over stragety could have been attempted to reach written Tamil for the various social linguistic reasons. But, having kept in mind the linguistic differences between Home dialect and school language at the phonological, grammatical, lexical and semantic levels, materials in school language have been prepared and provided for the multimedia.

### *Multimedia*

Multimedia consists of Text, graphics, video, animation, sound and voice. Multimedia technology when used in creating supplementary material emphasises and enhances language learning in an interactive way using the live situation, which is not possible in any other media.

### *Sentamil*

Sentamil is a multimedia based software for learning Tamil (which could be made for any language) as a first language for those who have Tamil as their mother tongue (home dialect).

The main objective of Sentamil development is to develop, re-inforce and enhance all the four basic language learning skills which may generally be learned in a conventional class room teaching/learning situation. The presentation of materials are such that, the other objective of Sentamil is to present the material for effective learning through entertainment.

Sentamil is comprised of the following components :

(1) Moral stories / narratives for developing listening

(2) Words and sentences for development of vocabulary / reading

(3) Words for spelling / pronunciation practice

(4) Script teaching with hand movements.

**Listening Skills** : Simple moral stories and other stories which can inculcate the Tamil culture and ecosystem are presented in its natural environment. The stories are presented with suitable visuals and necessary animations and narrated with dramatization and description. The narration is in simple language with clear pronunciation, intonation and expression. The development of listenting skills is evaluated through newly designed and interesting exercises, The Development of sequencing in presentation through coherance and cohessiveness are also tested.

**Vocabulary teaching** : Graded vocabulary with its proper pronunciations is given to increase the learner's lexicon. Word building and word formation are explained in such a way that the learners can interestingly interact with the package and learn. Ample exercises and innovative and interactive language games are included to improve the vocabulary development.

**Speaking** : Designed in such a way that the learner can acquire the speaking skill with proper pronunciation and intonaion. Provision for group drills to be monitered by the teacher is also given.

**Script teaching and Writing** : Introduces all Tamil letters through shape similarity and pattern perception method as adopted in the Tamil Nadu text books. It emphasizes the appropriate hand movements, with animation, sound symbol correlation, letter in words, words with proper pronunciation etc are the major characterstic features. Reinforecement of script learning through exercises. Learner centered provision for error correction are also given.

Provision is made to acquire the appropriate Tamil orthographic strokes, in letter, word and sentence levels. This is done by way of giving appropriate instruction given in the package for writing practice. Facility to practice writing after listening to the pronunciation and also by viewing the text in all levels is also provided.

**Exercise and games** : The package comprises of a number of creative and interactive exercises and games. which are highly suitable to the computer media. In a sense they demand active participation of the learners, monitor the children in language learning and create group interaction. In addition to these, they develop the analytical and creative thinking of the children.

### *Material preparation for Sentamil.*

Material preparation for multimedia based contents is a new experience as there was no materials / softwares available for syllabus based learning. I myself got involved during the material preparation. During preparation, it was learnt that more care was to be taken for ensuring the multimedia from all angles.

### *Scope of Sentamil*

Sentamil is first of its kind for any of the Indian languages. With lot of exercises and games, this type of material could be prepared for other Indian languages as well. This product is not only useful as suplementary but could also be used as stand alone aid. The children can use the CD on their own pace and learn Tamil leisurely.

The multimedia based Teaching / learning materials (Aids) bring life and helps pupils better understand the abstract difficult concepts easier and grasp. It also motivates the learning interest of the pupils with the real life animations with sound effects and music in it and helps reduce the labour of the teachers. Multimedia also enables the learners in re-inforcement the subject by means of games and in turn paves ways for debates and discussions. Material development are influenced by these and help gross human development.

### *Conclusion*

Experts say that there are four Es (Explore, Experience, Enlarge and Evaluation) to take care of proper development of education methods. Training aid in the form of multimedia language learning software comes handy with all these perceptions and again the package is conceived, devised and produced with all these perceptions to serve the School language to cater for the blossoming buds and spread of its strength of augmenting the existing educational training aids, less this fascinating method.

## Colophon

I wish to thank Dr V. Gnanasundaran, Dr N. Nadaraja Pillai, Dr Sam Mohan Lal and Dr M.Ganesan, all from CIIL Mysore, who are involved with me in the preparation of Sentamil.

## BIBLIOGRAPHY

1. TAMIL - An Auto Insructional Course by Dr N. Deivasundarm and Dr. A. Gopal, International Institute of Tamil Studies
2. Hand Book TAMIL - An Auto Instructional Course by Dr S. Jean Lawrence and Dr. D.Renganathan of International Institute of Tamil Studies
3. A Syntactic Study of TAMIL Verbs by Shri (Now Dr) N. Nadaraja Pillai of CIIL
4. A Linguistic Study of the Problems in Learning Tamil by Tribal children of the Nilgiris by Shri C. SIVAKUMAR of CIIL
5. A Programmed Course in TAMIL by Shri G. SANKARANARAYANAN of CIIL
6. Social Psychological Perspectives on Second Language Learning by Shri R.K.Agnihotri, A.L. Khanna and I. Sachdev for SAGE Publications.
7. School Psychology by Dr Ramnath Sharma for RAJHANS Publications
8. Sentamil by APPLESOFT, Bangalore - 560 010.

# தமிழ் ஆராய்ச்சிக்குக் கைகொடுக்கும் தகவல் தொழில்நுட்பம்

சு. சீனிவாசன், அறிவியல் அலுவலர்,
கணிப்பொறிக் கோட்டம்,
இந்திராகாந்தி அணுவாராய்ச்சி மையம்,
கல்பாக்கம். 603 102

தமிழில் கருத்துப் பரிமாற்றம் பேச்சு மூலமும் எழுத்து வடிவத்திலும் பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகிறது. பேச்சுவழி செய்திகளைப் பதிவு செய்யும் முயற்சி இருபதாம் நூற்றாண்டில் தான் தொடங்கிற்று. எழுத்துவடிவ பரிமாற்றம் பல நூற்றாண்டுகளாகப் பதிவு செய்யப்பட்டுக் கிடைக்கிறது. தமிழின் தொன்மைக் கால இலக்கியங்கள் பலவும் செய்யுள் வடிவிலேயே இருக்கின்றன. கடந்த சில நூற்றாண்டுகளாக உரைநடையில் எழுதும் போக்கு வளர்ந்திருக்கிறது.

அண்மைக் காலங்களில் மொழியின் பண்பைத் தகவற் கோட்பாட்டின் (Information Theory) அடிப்படையில் கணிக்கும் வழிமுறைகள் தோன்றி இருக்கின்றன. தொலை இடங்களுக்குத் தகவலை உரையாகவோ (Text), வரைவாகவோ (Graphics), பேச்சாகவோ (Speech) விரைந்து அனுப்ப மொழியின் பண்புகளை ஆய்வுசெய்யும் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இப்பண்புகள் மொழிகளுக்கிடையே வேறுபடுகின்றன.

கணிப்பொறி (Computer), தொடர்பு (Communication), வலையமைப்பு (Network) ஆகியவற்றின் சங்கமமாகக் கருதப்படும் தகவல்நுட்பத் துறையின் வளர்ச்சி அசுர வேகத்தில் நிகழ்ந்து வருகிறது. அறிவியல் வளர்ச்சியில் கணிப்பொறி ஒரு கருவியாக மட்டுமல்லாமல், ஆய்வுக் கூடமாகவும் (Laboratory) விளங்குகிறது. பல பரிமாணத் தோற்றங்களை எளிதில் கணிப்பொறித் திரையில் கொண்டுவந்து விளங்கிக்கொள்ள 'வரைகலை' (Graphics) பேருதவியாக இருக்கிறது. உலக வலைப்பின்னல் (World Wide Web) எனப்படும் இணையத்தின் வாயிலாக எத்துறைப் பற்றிய செய்தியையும் தகவலையும் பெற முடிகிறது. வலிமையான தேடல் பொறிகள் (Search engines) இலக்கியங்களைச் சில மணித்துளிகளில் துருவி ஆராய்ந்து நாம் கேட்கும் தகவல்களைத் திரைமுன் கொண்டுவந்து கொடுக்கின்றன. ஒளி–ஒலி தகவல்களைக் கோப்புகளாக (Files) உடனுக்குடன் பரிமாறிக்கொள்ள முடிகிறது. படக்காட்சி முறையில் தொலைமாநாடுகளையும் நடத்த இயலுகின்றது. மின்–அஞ்சல் போன்று மின்–இதழ்களும் (E-Journals) இணையத்தில் (Internet) வாசிக்கக் கிடைக்கின்றன.

தையற்பொறி, கடைசல் எந்திரம் போல கணிப்பொறியும் ஒரு கருவியே. இருப்பினும் இஃது ஒரு குறிப்பிட்ட பணிக்கென அல்லாமல் பல் துறைகளிலும் பயன்படவல்லது. ஈராயிரம் ஆண்டு பழமை உடைத்த தமிழ் மொழியில் அமைந்துள்ள 'யாப்பிலக்கணக் கோட்பாடு' கணித அடிப்படையில் வேரூன்றி மிளிர்வதைக் காணலாம். இரும இலக்கம் (Binary Digit) என்று நாம் கூறும் உண்டு/இல்லை பண்பை நேர்/நிரை என்ற 'அசை' உறுப்பாக நம் முன்னோர்கள் கையாண்டிருக்கிறார்கள். எழுத்தினாலாவது அசை; அசையினாலாவது சீர்; பல சீர்களால் அமைவது அடி–என்பதற்கு ஒப்பாக கணிப்பொறியில் சேமிக்கப்படும் தகவல்கள் bit (the smallest unit of storage), byte (fixed number of bits), word (collection of bytes) என வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன.

தகவல்களைச் செலுத்துவதற்காகும் நேரத்தை எங்ஙனம் திறம்படக் குறைப்பது என்பதைக் காண இன்றைய தகவல் கொள்கை முயலுகிறது. பண்டைய சமுதாயம் இத்தகு தகவல்களை எவ்வாறு எளிதாகவும் விரைவாகவும் ஊடகத்தில் பதிவு செய்யலாம் என்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. தமிழ் உரைநடையில் பயிலும் உயிர்மெய் எழுத்துகள் இன்றைய தகவல்நுட்பத்திற்கு உகந்த முறையில் அமைந்துள்ளன. அன்று ஏட்டில் பதிவு செய்வதற்குக் காட்டிய முக்கியத்துவத்தை, இன்று நாம் தகவல் தொடர்பில் புகுத்திக் கொண்டிருக்கிறோம்.

தமிழ் எழுத்து வடிவம் ஆங்கிலத்தைப் போல் சமநீளக் குறியீடாக (Fixed length code) அமையாமல், மாறும் நீளம் கொண்ட குறுயீடாக (Variable length code) அமைந்திருக்கிறது. இதன் வரலாற்றுப் பின்னணியில் தகவல் செறிவு (data compression) என்ற பண்பு மறைந்திருப்பதை இன்றைய தகவற் கோட்பாட்டைக் கொண்டு விளக்க முடிகிறது. தந்திமுறையில்

தகவல் அனுப்பப் பயன்படும் மோர்சு குறிமுறையில், அதிகமாக ஆளப்படும் எழுத்துகளுக்கு நீண்ட குறியீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. மோர்சு குறிமுறை அடிப்படையில், தமிழ் நெடுங்கணக்கை ஆராய்வோமானால் ஓர் உண்மை புலப்படுவதைக் காணலாம். இங்கு ஒரெழுத்து வடிவிலான அகர, உகர உயிர்மெய் வரிசை எழுத்துகள் அதிகம் புழங்குவதையும், மூன்றெழுத்து வடிவிலான ஒகர, ஓகார உயிர்மெய் வரிசை எழுத்துகள் அரிதில் புழங்குவதையும் மதிப்பிட முடிகிறது. நவீன தகவல்நுட்பக் கோட்பாட்டுக்கு ஒத்த வகையில் தமிழ் உயிர்மெய் எழுத்துகள் மெல்லப் படிமலர்ச்சி (evolution) கண்டு முகிழ்த்திருக்கின்றன என்ற செய்தி வியப்புக்குரியது.

இத்தகு சிறப்புமிக்க உயிர்மெய் எழுத்துகளை, கணிப்பொறியில் உள்ளிடவும் பதிவு செய்யவும் நேர்த்தியான உத்திகளைப் பின்பற்றுகிறோமா என்று வினா எழுப்பின் குழப்பமே மிஞ்சுகிறது. வகுப்பறைக்கு வரும் மாணவர்கள் எந்த வண்ண ஆடையும் அணிந்து வரலாம் என்று சுதந்திரம் அளிக்கலாமா? வகுப்பறைக்கு வந்தபின் அங்குள்ள இருக்கையில் எங்கு வேண்டுமானாலும் அமரலாம் என்று அனுமதிக்கலாமா? இவற்றுக்கு விடை கண்டுபிடித்துவிட்டால், கணிப்பொறியிலும் தமிழ் எழுத்துகள் களிநடம்புரியத் தொடங்கிவிடும் என்று கேட்க உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். இதற்கு உகந்த சாவிப்பலகை அமைப்பும் (keyboard layout) குறியீடுகளும் (codes) நெறிப்படுத்தப்பட்ட வேண்டும். கலங்கிய நீர் தெளியட்டும் எனக் காத்திராமல், குண்டானில் படிகாரத்தைப் போட்டு நீரை இறுத்துப் பருக வேண்டிய நேரம் வந்தாயிற்று.

கணிப்பொறித் துறையில் நாள்தோறும் ஏற்பட்டுவரும் வளர்ச்சி காரணமாக, இன்று பொறிகளுக்கு கட்புலன், செவிப்புலன், பேச்சுத் திறன் ஆகியவற்றை ஊட்டும் முயற்சிகள் உலகின் பல மூலைகளில் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்திற்கும் அடிப்படையில் தேவைப்படுவது தகவலை இலக்கமாக்கும் (digitising) வழிமுறையாகும். எழுத்திலிருந்து பேச்சு உருவாக்கம் (text-to-speech), கையெழுத்தை அடையாளம் காணல் (hand written character recognition), பேச்சை அறிதல் (speech recognition), பேசுவோரை இனம்காணல் (speaker verification) ஆகியவற்றுக்கு இன்று கணிப்பொறியுடன் கூடிய மென்பொருள்கள் (softwares) உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் தமிழில் அச்சேறிய எழுத்துகள் அடையாளம் காணும் முறை தரவுத்தள (database) பணிகளை விரைந்து மேற்கொள்ள உதவிடும்.

தமிழ் எழுத்துகளின் வரைவியல் குறித்த வருணனை (geometrical description of characters) தமிழ் இலக்கண நூல்களில் விரிவாக கூறப்படவில்லை. அரசுப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள், இரண்டாம் வகுப்பிலேயே அனைத்து தமிழ் வரிவடிவுகளையும் எழுதக் கற்றுக்கொண்டு விடுகின்றனர். இது தொடர்ந்த பயிற்சியின் காரணமாகவே சாத்தியமாகிறது. அவர்கள், எழுத்துகளை விரைந்து அடையாளம் கண்டு வாசிக்கவும் பயிற்சி பெற்றுவிடுகிறார்கள். இந்தக் கற்றல் நிகழ்வின் (learning phase) பின்னணியில் இன்றைய தமிழ் எழுத்து வடிவின் பல்வேறு கூறுகளை, நாம் நினைவில் நிறுத்துகிறோம். அவற்றில் பெரும்பாலானவற்றை ‘வரைவழி நாற்பது’ எனும் தலைப்பில் தொகுத்துள்ளோம். இவற்றில் சில படம் 1ல் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலே கொடுக்கப்பட்டவை போன்ற வரிவடிவின் பண்புகள் நாற்பதையும் உணர்வு நிலையில் கருவிக்கு ஊட்டுவது எளிய பணியன்று. இச் செயலுக்கு ‘செயற்கை நரம்பணு வலைப்பின்னல்’ (artificial neural network) என்ற வழிமுறை பின்பற்றப்படுகிறது. சிக்கல் வாய்ந்த ‘கையெழுத்தை அடையைாளம் காணும் பணி’ முதலியவற்றுக்கு இந்த வழிமுறை உகந்தது. தமிழ்ல் அச்சேறிய எழுத்துகளை பகுத்து அடையாளம் காண வரைவியல் (geometry) அடிப்படையிலான செயல்முறை ஏற்புடையது. இப் பணிக்கு ‘ஒளிசார் எழுத்துரு அடையாளம் காணல் முறை’ (optical character recognition method) செயல்வடிவம் அளிக்கின்றது.

திராவிட மொழிகளில் குறைந்த எழுத்துருவங்களைக் கொண்ட மொழி தமிழ் ஒன்றே! தமிழ் உரைநடையில் பயிலும் சொற்களின் சராசரி நீளம் 4.4 எழுத்துகள். அதாவது பெரும்பாலான சொற்கள் 4 முதல் 5 எழுத்து நீளமுள்ளவையாக இருக்கின்றன மலையாளத்தில் சொற்களின் சராசரி நீளம் 5.9. அதாவது பெருவாரியான சொற்கள் 5 முதல் 6 எழுத்து நீளமுடையன. வடவெழுத்துகள் அதிகம் புழங்கப்படும் மலையாளத்தில் சந்திகளைக்கொண்டு சொற்களை இணைக்கும் பண்பு மிகுதி. மொழியின் நெடுங்கணக்கை வல்லினம், இடையினம், மெல்லினம் எனப் பிரித்து, இனவெழுத்துகளின் புழக்கமும் கணிக்கப்பட்டது. இனவெழுத்துகளில் சுமார் 50 விழுக்காடு வல்லெழுத்துகளே அரசோச்சுகின்றன. தமிழ், மலையாள மொழிகளில் இடையினமும் மெல்லினமும் 1 : 1 என்ற விகிதத்தில் கையாளப்படுகின்றன. கன்னடம், தெலுங்கு மொழிகளில் இவ்விகிதம் 2 : 1 என்ற அளவில் அமைகிறது. தமிழில் 18 மெய்வரிசை எழுத்துகள் இருப்பினும்,

பண்பு 1: சிறகுகள் குவித்த எழுத்துருக்களாவன:

ஈ, உ, ஊ, எ, க, கூ, ங, ச, சு, ட, டீ, ண, ப, ம, ய, ல, வ, ள, ன, ஸ, ா, ை, ௌ (23)

பண்பு 2 : சிறகுகள் விரித்த எழுத்துருக்களாவன:

இ, ஞ், ஞி, ஞீ, டு, டூ, த், தி, தீ, ந், நி, நீ, ழ், ழி, ழீ, ற், றி, றீ, ஜ், ஜி, ஜீ, ஷ், ஷி, ஷீ, ஹ், ஹி, ஹீ, க்ஷ், க்ஷி, க்ஷீ, ஸ்ரீ (31)

பண்பு 3: மேற்புறம் சிறகு விரித்த எழுத்துருக்களாவன:

ஃ, க், கி, கீ, ங், ஙி, ஙீ, ச், சி, சீ, ட், ண், ணி, ணீ, ப், பி, பீ, ம், மி, மீ, ய், யி, யீ, ர், ரி, ரீ, ல், லி, லீ, வ், வி, வீ, ள், ளி, ளீ, ன், னி, னீ, ஸ், ஸி, ஸீ, ெ, ே, ௌ (44)

பண்பு 4: கீழ்புறம் சிறகு விரித்த எழுத்துருக்களாவன:

அ, ஆ, ஏ, ஐ, ஒ, ஓ, கு, ஙு, நூ, சூ, ஞ, ஞு, ஞூ, டி, ணு, ணூ த, து, தூ, ந, நு, நூ, பு, பூ, மு, மூ, யு, யூ, ர, ரு, ரூ, லு, லூ, வு, வூ, ழ, ழு, ழூ, ளு, ளூ, ற, று, றூ, னு, னூ, ஜ, ஷ, ஹ, க்ஷ (49)

பண்பு 5: சுழியில் தொடங்கும் எழுத்துருக்களாவன:

அ, ஆ, இ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஞ், ஞ, ஞி, ஞீ, ஞு, ஞூ, ண், ண, ணி, ணீ, ணு, ணூ, ல், ல, லி, லீ, லு, லூ, வ், வ, வி, வீ, வு, வூ, ள், ள, ளி, ளீ, ளு, ளூ, ன், ன, னி, னீ, னு, னூ, ஜ், ஜ, ஜி, ஜீ, ஷ், ஷ, ஷி, ஷீ, ஸ், ஸ, ஸி, ஸீ, ஹ் ஹ, ஹி, ஹீ, ெ, ே, ை (65)

பண்பு 6: சுழியில் முடியும் எழுத்துருக்களாவன:

ஓ, கீ, ஙீ, சீ, ஞீ, டீ, டூ, ணீ, தீ, நீ, பீ, மீ, மூ, யீ, ரீ, ரூ, லீ, வீ, ழீ, மூ, ளீ, ளூ, றீ, னீ, ஜீ, ஷீ, ஸீ, ஹீ, க்ஷீ, ஸ்ரீ, ே (31)

பண்பு 7: சுழியில் தொடங்கி சுழியில் முடியும் எழுத்துருக்களாவன:

ஓ, ஞீ, ணீ, லீ, வீ, ளீ, ளூ, னீ, ஜீ, ஷீ, ஸீ, ஹீ, ே (13)

படம் 1 வரைவழி நாற்பது

இவற்றில் அனைத்து வரிசை எழுத்துகள் இருப்பினும், இவற்றில் அனைத்து வரிசை எழுத்துகளும் சமஅளவில் பயனாவதில்லை. எடுகொட்டாக ங, ஞ வரிசை எழுத்துகள் அரிதே வருகின்றன. கணிப்பொறிக் கொண்டு உரைநடையை ஆராய்ந்தபோது தமிழில் பயனுடைய மெய்வரிசை எண்ணிக்கை 14 என நிறுவ முடிந்திருக்கிறது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வழக்குடையதாக விளங்கும் தமிழ் மொழியில் உள்ள நூற்பகுதிகள் சில ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டனவா அல்லது அவற்றின் ஆக்கத்தில் பலர் தொடர்புடையவர்களாக இருந்தார்களா என்ற ஐயம் அறிஞர் பலருக்கு எழுவது உண்டு. நூற்பகுதியில் காணும் நடைவேறுபாட்டைக் கொண்டு மொழியியலார் சிலர், இங்ஙனம் முடிவுகட்டுவது இயல்பே. இக்கூற்றுக்கு முழுமையான விடைகாண்பது இயலாது என்ற போதிலும், நுலாசிரியரை அடையாளம் காண எழுத்துறவுக் கணிப்புமுறையைப் (letter correlation computing method) பயன்படுத்த முடிகிறது. திருவள்ளுவர், கம்பர், பாரதியார் ஆகியோரின் நடை அவர்தம்மையின்றி பிற நுலாசிரியரோடு ஒத்துப் போவதில்லை என்பதைக் கணிப்பிலிருந்து அறிகிறோம். ஒரு உரையில் காணப்படும் எழுத்துகளின் நிகழ்வு (occurrence), எழுத்துச் சரங்களின் உறவு (letter string correlation), அடுத்துவரும் சொற்களுக்கிடையேயான ஒழுக்கு

(order), சொற்களின் புழக்கம் (frequency), செய்யுள் நடையில் பயிலும் யாப்பு இவற்றைப் புள்ளியியல் அடிப்படையில் ஆய்வு செய்வது பயன் அளிக்கக் கூடியது.

இனவெழுத்துகளின் புழக்கம் (க - ங, ச - ஞ, ட - ண, த - ந, ப - ம, ற - ன), வெண்பா யாப்பில் பயிலும் தளை (மா முன் நிரை, வின முன் நேர், காய் முன் நேர்), வாக்கியங்களில் தொடர்ந்து வரும் வேற்றுமை உருபுகளின் (ஐ, ஆல், கு, இன், அது, கண்) பயன்பாடு ஆகியவற்றை மார்க்கோவ் செயல்முறை கொண்டு ஆராய முடிகிறது. இப்பணியை விரைந்து மேற்கொள்ள, கணிப்பொறி கைகொடுக்கிறது. விண்ணில் ஏவுகளை ஒன்றைச் செலுத்த நாள் ஒன்றைத் தெரிவுசெய்ய வேண்டியிருக்கிறது எனக் கொள்வோம். தொடர்ந்து 7 நாட்கள் 'வெயில்' பொழுது இருக்கவேண்டும் என்ற நிபந்தனைப் பிறப்பித்து நாள் குறிப்பதற்கு 'மார்க்கோவ்' செயல்முறை பயன்படுகிறது. இதையொத்த கேள்வி ஒன்றை திருக்குறள் நூலிலும் எழுப்பிடலாம். குறள் வெண்பாவில், அனைத்தும் காய்ச்சீர் கொண்ட குறள்கள் எத்தனை வருகின்றன? வள்ளுவர் நடையில் – முழுவதும் வெண்சீர் வெண்டளை கொண்ட குறளின் விழுக்காடு என்ன? ஆகியவற்றுக்கு 'மார்க்கோவ்' செயல்முறை பதிலளிக்கிறது. வள்ளுவர் நடையில் ஏறக்குறைய 5000 குறள்களுக்கு ஒரு முறையே காய்ச்சீர் தொடர்ந்து வரக்கூடும் என்பது முடிவாக இருப்பின், வள்ளுவர் தாம் யாத்த நுலைப் போன்று மும்மடங்கு எழுதினாலும்,

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவர் சாந்துணையுங் கல்லாத வாறு. (397)"

எனும் முற்றிலும் காய்ச்சீர் கொண்ட குறள் போன்று மீண்டும் ஒன்று வாராது என்பதை நிறுவ முடிகிறது. நாலடியார் நூலை பலர் எழுதினார்களா என்பதற்கும் தளை ஆய்வு உதவிடுகிறது.

சிறுகதைகளின் நடைப் பண்பை மதிப்பட வாக்கிய நீளம் ஒரு காரணியாக அமைகிறது. வருணனை மிகும் இடங்களையும், உணர்வு வெளிப்படும் இடங்களையும் வாக்கியத்தில் இடம்பெறும் சொற்களின் எண்ணிக்கையிலிருந்து ஒருவாறு கணிக்க முடிகிறது. சிறுவர்களுக்கான படைப்பு இலக்கியங்களில் எளிய வாக்கிய அமைப்பு கொண்ட நடையை தெரிவுசெய்ய வாக்கிய நீள மதிப்பீடு ஓர் அலகாக உதவிடுகிறது. அகராதி உருவாக்கும் பணியில் புதுமைகள் பல நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. அன்றாட வாழ்வை வழிநடத்திச் செல்லவும் இடம்பெயரும் புதிய மக்கள் சூழலுக்கு ஏற்ப, அடிப்படை வழக்குச் சொற்களைத் (vocabulary) தெரிந்துகொள்ளவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிதாக மொழியைக் கற்போருக்கு இத்தகு சொற்களைத் திரட்டித்தருவது பயன் அளிக்கக்கூடியது. நாளேடுகளில் வரும் தலைப்புச் செய்திகளை புரிந்துகொள்ளும் வகையில் இச்சொல் திரட்டு அமைவது நன்று. சிக்கல் மிகுந்த எழுத்துகள் கொண்ட சீன, ஜப்பான் மொழிகளைக் கற்க, சொல் புழக்கத்தின் அடிப்படையில் அமைந்த அகராதிகள் உதவுகின்றன. அவற்றை ஒத்த முயற்சிகள் கணிப்பொறி துணை கொண்டு தமிழிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பிறமொழியிலுள்ள அறிவுக் கருவூலங்களை நுகர்வதற்கு மொழி பெயர்ப்பு இன்றியமையா ததாகிறது. எல்லா அறிவுச் செல்வங்களும் ஒரே மொழியில் கிடைத்துவிடுவதில்லை. பொதுவாக, மொழிபெயர்ப்பு என்பது செம்மையாகவும் நம்பகத்தன்மையுடனும் இருத்தல் வேண்டும். மொழியின் தன்மைக்கேற்ப, மொழிபெயர்க்கப்பட்ட பகுதியின் அளவு வீக்கமுறவோ சுருங்கவோ செய்கிறது. இவற்றை அளந்து மதிப்பிட வழிமுறை காண்பது அவசியமாகிறது. உரையின் வரி நீளம், தகவற் திணிவு (information content or entropy) ஆகிய அளவு கோலை அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்ப்பை மதிப்பிட முடிகிறது.

இந்திய மொழிகளில், குறிப்பாக தமிழ்மொழிக்கு இரு சிறப்புகள் உண்டு. முதல் சிறப்பு தமிழ்நெடுங்கணக்கில் எழுத்துகள் குறைவு என்பதும் கூட்டெழுத்துகள் இல்லை என்பதாகும். இரண்டாவது சிறப்பு, ஒரே வல்லெழுத்து பல நிலைகளில் மாறுபட்ட ஒலிகளை உருவாக்குவதற்கு தமிழில் நெறிகள் வகுக்கப்பட்டிருப்பதாகும். ஐரோப்பிய மொழிகளின் எழுத்தமைப்பு எளிது என்றாலும் அவற்றிலுள்ள சொற்களை உச்சரிப்பதற்கு மிகுந்த பட்டறிவு தேவைப்படுகிறது. நம்மொழிகளில் எழுத்தமைப்பு சிக்கலானது என்றாலும் எழுதுவதைப் போலவே உச்சரிக்கிறோம். எனவே உரையிலிருந்து பேச்சு உருவாக்கம் என்பது தமிழில் எளிதாக மேற்கொள்ளக்கூடிய பணியாகும்.

பேச்சுத் தமிழைப் பதிவுசெய்து அவற்றினின்று, குறில், நெடில் எழுத்துகளுக்கான மாத்திரை அளவை துல்லியமாக கணக்கிடமுடிகிறது. குறில் எழுத்துகளுக்குரிய ஒலிப்பதிவு நேரம் 150 மில்லி செகண்டுக்கு உள்ளாகவும் நெடில் எழுத்துகளுக்கான நேரம் 200 மில்லி செகண்டுக்கு

உள்ளாகவும் இருக்கின்றன. வல்லொற்றுகளை பதிவு செய்ய கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. இவ்வொலிப் பதிவில் அமைதிப் பள்ளத்தாக்குகள் (silence period) இருப்பது அவைநேர்த்தி செய்யும்போது வெளிப்படுகிறது. தமிழிசைப் பண்களையும் தாளங்களையும் விரிவாக ஆராயவும் கணிப்பொறி கைகொடுக்கிறது.

கணிப்பொறித் தொழில்நுட்பம், தமிழ் ஆராய்ச்சியின் பரிமாணத்தை விரிவுபடுத்தவும் விரைவுபடுத்தவும் உதவிடக் கூடும். இருப்பினும் இத்தொழில்நுட்பம் கடைக்கோடி மக்களுக்கும் கிட்டவேண்டுமென்றால், இத் துறைசார்ந்த நூல்கள் தமிழில் வெளிவருதல் அவசியம். அண்மையில், அண்ணாப் பல்கலைக்கழகம் கணிப்பொறிக் கலைச்சொல் அகராதி ஒன்றை தமிழில் வெளியிட்டு இருக்கிறது. இதில் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட கலைச்சொற்கள் இடம்பெற்றுள்ளன. தமிழ் மொழிக்கான சாவிப்பலகை அமைப்பும் குறியீடுகளும் தரப்படுத்தப்பட்டு விட்டால், நம் பயணம் எளிதாகும். அகராதிகளையும், தரவுத் தளங்களையும் தமிழ் வாயிலாக கணிப்பொறியில் நிறுவி, இணையத்தின் மூலம் தொடர்புகொள்ளும் நாட்கள் வெகுதொலைவில் இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. வாழ்க தமிழ்; வளர்க தமிழர் பணி!

**18.01.99**

# தொன்ம வேர்களை இணைக்கும் மின் வேர்!

சா.அ.சௌரிராசன்
தொழில்நுட்ப இயக்குநர், இன்தாம் இணையம்,
1-பி, ஜே.பி.டவர் முதல் தளம், 7/2, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600 034,
தொலைபேசி : 8275639, 8236473, மின்னஞ்சல் : sowri@intamm.com,
இணைய பரப்புகள் : www.intamm.com, www.tamilisai.com, www.thirukkural.com

## தமிழர்கள் நிமிர்ந்ததும் நிலை குலைந்ததும்

உலகின் ஆறு கண்டங்களிலும், அறுபத்தைந்து நாடுகளுக்கு மேற்பட்டு, ஒன்பது கோடித் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

உலக நாடுகளில் எங்கும் பரவியிருக்கும் தமிழ் இனம், ஏன் பரவியது? எப்படிப் பரவியது? சங்க காலத்தில் திரைகடல் ஓடி திரவியம் தேடிய தமிழர்கள், 10 ஆம் நூற்றாண்டில் கீழ்த்திசை நாடுகளை வெற்றி கொண்டு அரசாண்ட தமிழர்கள், 17 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 18 & 19 ஆம் நூற்றாண்டுகளிலும் ஆங்கிலேயர்களுக்கு அடிமைச் சேவகம் செய்ய கூலிகளாக உலகம் முழுவதும் பரவினர்.

தமிழர்கள், மலேயாவின் பால் மரக் காடுகளிலும், இலங்கையின் தேயிலைத் தோட்டங்களிலும், மொரிஷியஸ், பிஜி, பிரஞ்ச் கயானா, பிரிட்டிஷ் கயானா, சுரிநாம், மேற்கிந்தியத் தீவுகள், போன்ற நாடுகளின் கரும்புத் தோட்டங்களிலும், தென்னாப்பிரிக்காவின் சுரங்கங்களிலும் ரத்தத்தை வியர்வையாக்கி உழைத்து அட்டைகளுக்கும், மலேரியா கொசுக்களுக்கும், விபத்துக்களுக்கும் தம் இன்னுயிரை இழந்தனர். எஞ்சியோர், வாழ்க்கையின் கடைக் கோடி நிலையில் போராடி உழைப்பு, உழைப்பு, என்பதைத் தவிர உயர்வு உயர்வு என்பதை அறியாமலேயே தத்தமது நாடுகளின் பொருளாதார வளத்திற்கு அடித்தளமிட்டு உயர்த்தினர்.

## தொடர்பின்மையே

அத்தகைய தமிழர்களுக்கு வரலாறு இட்ட பெயர்கள் கூலி, அடிமை, மாவுச் சாக்கு, கோணி, சாலா மதராஸி, கட்டா பாணி, கள்ளத் தோணி, நாடற்றவர், அகதி என்றெல்லாம் நீள்கிறது. ஆனால் இதே வரலாற்றில் இங்கிலாந்து நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்காக புறப்பட்ட ஆங்கிலேயர்கள், வணிகம் செய்து அதன் தொடர்ச்சியாக நாடுகளையும் கைப்பற்றி ஆட்சி செய்து தமது ஆங்கில மொழியையும் பரவச் செய்து நிலை பெறவைத்தனர். அடிமையாய் கூலியாய் புறப்பட்ட தமிழன் தனது தாய்மொழியை மறந்தான், பண்பாட்டுக் கூறுகளை இழந்தான், வேற்று மொழியோடும் இனத்தோடும் கலந்தான். இன்று பெயர்களிலும், சில மதச் சடங்குகளிலும் மட்டுமே அடையாளம் காணப்படக் கூடியவனாக வாழ்ந்து கொண்டிருக்கிறான். இதற்குக் காரணம் என்ன? தொடர்பின்மையே! சென்ற நூற்றாண்டுளில் தாய்த் தமிழகத்திற்கும், மற்ற நாடுகளில் பரவிய தமிழர்களுக்கும் தொடர்ச்சியான தொடர்பு இல்லாமல் இருந்ததுதான் அடிப்படை காரணமாகும்.

## எழுத்துத் தமிழை இழந்தது

உலகம் பரவிய தமிழர்களின் முதல் தலைமுறை தமது தாய் மொழியாகிய தமிழை பேச்சு, எழுத்து என இருவடிவங்களிலும் பயன்படுத்தியது. ஆனால் அடுத்த தலைமுறை எழுத்தை இழந்தது. அதற்கடுத்த தலைமுறை பேச்சுத் தமிழைப் புரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு மாறியது. அதற்கடுத்த தலைமுறை பெயரில் மட்டுமே அடையாளம் காணப்படக் கூடியதாகியது. ஐந்தாம் தலைமுறை, பெயர்களிலும், பெயர்களை உச்சரிக்கும் விதங்களிலும் மாற்றமடைந்தது. அதற்கு அடுத்தத் தலைமுறை மத வழிபாட்டு முறைகளில் மட்டுமே தமிழன் என்று அடையாளம் காணப்படக்கூடிய அளவிற்கு மாறியது.

மொழியின் சிதைவுக்கும், மத மாற்றங்களுக்கும், பல் இன, மொழி ஆதிக்கங்களுக்கும் பிறகு தமிழர்கள் ஒரளவிற்கேனும் அடையாளம் காணப்படக் கூடியவர்களாகவும், தமது வரலாற்றை மறக்காதவர்களாகவும் இன்று ஆங்காங்கே வாழ்ந்து கொண்டிருப்பது வியப்புக்குரிய ஒன்றாகும்.

மேற்சொன்ன சூழ்நிலையை ஆராயும் போது முதலில் தமிழர்கள் தமது இரண்டாவது தலைமுறையிலேயே வரிவடிவ எழுத்துத் தமிழை இழந்து விட்டார்கள். அதன் காரணமாகவே தொடர்ந்து தமிழினம் தன்னுடைய இயல்புகளை இழந்தது.

அண்மையில் அறிவும், ஆற்றலும் உள்ள தமிழர்கள் தொழில் நெறிஞர்களாக (Professionals) அமெரிக்க ஐக்கிய நாடு, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் குடியேறியுள்ளனர். அதுபோலவே, இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்திற்கு பின் தாய் மண்ணில் வாழ முடியாத தமிழர்கள் கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் பல ஐரோப்பிய நாடுகளிலும் குடியேறியுள்ளனர். மேலும் தொழில் நெறிஞர்களாகவும், தொழிலாளர்களாகவும் வளைகுடா நாடுகளிலும், சென்ற 50 ஆண்டுகளாக குடியேறியுள்ளனர். இவ்வாறு குடியேறிய நாடுகளில் தமிழ்க் கல்வி கற்க முடியவில்லை. அவர்களின் இரண்டாவது தலைமுறையினரும் எழுத்து தமிழை இழந்து வருகின்றனர். தமிழ்நாட்டின் செய்திகளையும், அதன் தொடர்புகளையும், தமிழை படிக்கக்கூடிய ஆற்றலையும் இழந்து வருகிறார்கள். மொழியின் வளத்தையும், தாய்த் தமிழகத்தின் அல்லது தாங்கள் வசிக்கும் நாட்டின் அறிவியல், பொருளாதார, பண்பாட்டுக் கலாச்சார நிகழ்வுகளையும் தமிழ் மொழியின் மூலம் அறிந்து கொள்ள முடியாமல் மாற்று மொழி மூலமாக அறிந்து கொள்ள வேண்டிய கட்டாயமும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மலேசியா, சிங்கப்பூர், தமிழ்நாடு போன்ற தமிழர்கள் பெருமளவில் வாழும் நாடுகளிலும் ஆங்கில மொழியின் தேவையும், தாக்கமும், பொருளாதார காரணங்களுக்காக பயன்படுத்த வேண்டிய சூழ்நிலையும் உள்ளன. இவர்கள் தங்களின் பொருளாதார வாழ்வுக்கு தமிழ் பயன்படாது எனும் முடிவிற்குத் தள்ளப்பட்டார்கள். ஆங்கிலம் மாற்று மொழியானது. **எந்த ஒரு மொழியும் அந்த இனத்தின் பொருளாதார வாழ்விற்குப் பயன்படாவிட்டால் அந்த மொழி காலத்தால் அழியும். மொழி அழிந்தால் இனமும் அழியும்.** மேற்சொன்ன விஷயங்களில் மூன்று கருத்துக்கள் மையப்படுத்தப்பட்டுள்ளன.

1. **கலாச்சாரப் பண்பாட்டுத் தொடர்புகளை இழந்தது.**
2. **தமிழ் மொழியின் வரிவடிவத்தை இழந்தது, தமிழைப் படிக்கும் ஆற்றலை இழந்தது.**
3. **தமிழர்களின் பொருளாதார உயர்வுக்கு தமிழ்மொழி பயன்படாத சூழ்நிலையும், தமிழர்கள் பொருளாதார வல்லமை பெறாதவர்களாக இருப்பதும்.**

இந்நிலைகளுக்கு நாம் தீர்வு கண்டாக வேண்டும். முதலில் இணையத்தின் வழியாக உலக தமிழர்களிடையே கலாச்சார பண்பாட்டு தொடர்புகளை எவ்வாறு ஏற்படுத்தலாம் என்பதை பார்ப்போம்.

## இணைய ஊடகம்

இன்றைய தகவல் யுகத்தின் அதி நவீன எளிமையான, செலவு குறைந்த தகவல் தொடர்பு தொழில்நுட்பமான, இணையம் உலகெங்கும் உள்ளவர்களை தொடர்பு கொள்ள வழி செய்யும் அதே வேளையில், அனைத்து வகையான ஊடகங்களை (Media) உள்ளடக்கிய பல் ஊடகமாகவும் விளங்குகிறது.

வானொலியும், தொலைக்காட்சியும், அச்சில் வரும் அனைத்து வகையான பத்திரிகைகளும், உலகின் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் சென்றடைய கூடியதாக உள்ளது. செய்திகளும் தகவல்களும் பகுதி அல்லது நாடு சார்ந்த அளவிலேயே உள்ளன. உலகத் தமிழர்கள் அனைவரின் தேவையையும் பூர்த்தி செய்யக் கூடியதாக இல்லை. இன்றைய ஊடகங்கள் ஒரு வழி செய்தி தொடர்பாகவே உள்ளது. இருவழி கருத்து பரிமாற்றத்திற்கு வாய்ப்பு இல்லாமல் இருப்பது மற்றொரு குறைபாடாகும். உலக தமிழர்களை இணைக்கக் கூடிய வல்லமை பெற்றதாகவும் இரு வழிச் செய்தி பரிமாற்றம் கொண்டதாகவும் அமைந்திருப்பது இணையத்தின் சிறப்பாகும்.

1. **இணையத்தின் வழி கொண்டு தமிழ், தமிழர், தமிழர் வாழும் நாடுகள் தொடர்பான அனைத்து செய்திகளும் தகவல்களும் தொகுக்கப்பட வேண்டும்.**

    தமிழர்களின் தாயகங்கள் பற்றிய வரலாறு, தமிழர்கள் பல்வேறு நாடுகளில் சென்று குடியேறிய வரலாறு. வாழ்க்கைச் சூழ்நிலை, கல்வி, பொருளாதார நிலைமைகள் தமிழர்களின் ஊடகங்கள், தமிழ் மொழியின் நிலை, வெளிவரும் நூல்கள், கலை, கலாச்சார, பண்பாட்டு, அரசியல், கூறுகள். தமிழிசை, நாட்டியம், ஓவியம், சிற்பம், கட்டடக்கலை பற்றிய தகவல்கள். தத்தம் துறையில் சிகரம் தொட்ட தமிழர்கள், தமிழ் தமிழர் அமைப்புகள், அதன் செயற்பாடுகள், வழிபாடுகள் - தொடர்பான செய்திகள், தொழில் வாய்ப்புகள், நாடுகளின் ஒவ்வொரு பகுதியும் நகரங்களும் பெற்றுள்ள தொழில், வணிக, சுற்றுலா வாய்ப்புகள் போன்ற எண்ணற்ற தலைப்புகளில் தகவல்கள் தொகுக்கப்பட்டு இணையத்தின் வழி வழங்கப்பட வேண்டும். தொகுக்கப்படும் அனைத்து செய்திகளும் இணையம் வழி உலகத் தமிழர்களைச் சென்றடையும்.

இவ்வகையில் தொகுக்கப்படும் அனைத்துச் செய்திகளும் பெருமளவில் மாறுதல் அடையாத (More of Static Data) தகவல்களாகும். **இந்த வகையில் செயல்பட்டு வரும் எமது இணையப் பரப்பு www.intamm.com/infopool.htm**

2. **உலகத் தமிழர்களுக்காக ஒரு BBC, CNN, ராய்ட்டர் போன்ற செய்தி நிறுவனம் உருவாக்கப்பட வேண்டும்.**

 மலேசியத் தமிழர்கள் தமிழ்நாட்டுச் செய்திகளைப் படிக்கின்றனர். ஆனால் மலேசியச் செய்திகளை சிறிதளவே தமிழ்நாட்டு தமிழர்கள் படிக்கின்றனர். அதிலும் தமிழர்கள் தொடர்பான செய்திகள் குறைவே. அதைப்போலவே மொரிஷியஸ், பிஜி தீவு தமிழர்களின் நிலையைப் பற்றித் தமிழ்நாட்டுத் தமிழர்கள் அறிய வாய்ப்பில்லாமல் உள்ளது. மொரிஷியஸ் தமிழர்களுக்கு மிக மிக குறைந்த அளவே தமிழ்நாட்டு தகவல்கள் சென்றடைகின்றன. இந்நிலை மாறவேண்டும். அனைத்து நாட்டுத் தமிழர்களுக்கும், தமிழ், தமிழர் தொடர்பான செய்திகள் உலக அரங்கில் பரவலாக்கப்பட வேண்டும். எனவே இணையத்தின் மூலம் ஒவ்வொரு நாட்டிலும் வாழும் தமிழர்கள் சிலர் இணைக்கப்பட்டு அவர்கள் மூலம் அந்தந்த நாட்டின் தமிழர்களுக்கு ஆர்வம் உள்ள அரசியல், பண்பாட்டு, காலாச்சார, பொருளாதார செய்திகள் தொகுக்கப்பட்டு இணையத்தில் மையப்படுத்தப்பட வேண்டும். இந்த அமைப்பு தமிழர்களுக்கான ஒரு செய்தி நிறுவனமாக இயங்கும். இதன் வழி அனைத்து ஊடகங்களும் (வானொலி, தொலைக்காட்சி, அச்சில் வெளிவரும் பத்திரிக்கைகள்) பயன்பெற முடியும். இவ்வகையில் தொகுக்கப்படும் அனைத்து செய்திகளும் அன்றாடம் மாறக்கூடிய (Dynamic Data) தகவல்களாகும். **இந்த நோக்கில் செயல்படும் எமது இணைய முகவரி www.intamm.com/magazines.htm**

3. **இணையத்தின் மூலம் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் நடத்தப்பட வேண்டும்.**

 இணையத்தின் வழி நடத்தப்படும் வானொலி, தொலைக்காட்சி பத்திரிகைகள் உள்ளடக்கத்திலும் பரவலிலும் உலகம் தழுவியதாக அமையும். இன்றைய வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் போன்ற ஊடகங்களிலும் உள்ள குறைபாடுகள் இணையத்தின் மூலம் நடைபெறும் போது இல்லாமல் செய்ய முடியும். மேலும் செழுமையாக்கவும் முடியும். இதற்காக நாங்கள் பல இணைய இதழ் முகவரிகளை உருவாக்கியுள்ளோம், சில

 **www.intamm.com/winnosai/ionline.htm**
 **www.intamm.com/ta-comp/index.htm**
 **www.intamm.com/valar/contents.htm**

நாடகங்கள், திரைப்படங்கள், செய்திப்படங்கள் மற்றும் பல்வேறு வகையான நிகழ்ச்சிகளையும் இணையத்தின் வழி கேட்கவோ, பார்க்கவோ வாய்ப்புள்ள நிலைகள் உருவானால் கலாச்சார, பண்பாட்டு நிகழ்வுகளில் காலத்தாலும், தூரத்தாலும் ஏற்படக்கூடிய மாறுதல்கள் மட்டுப்படுத்தப்படும். **வலுவான உலகத்தமிழர் கலாச்சார பண்பாட்டு அடித்தளம் அமையும்.** பார்வைகளும், தேவைகளும் ஒரு முனை நோக்கி அமையும். இழந்த கலாச்சார பண்பாட்டு தொடர்புகளை மேற்சொன்ன மூன்று செயற்பாடுகளின் மூலம் நம்மால் நிச்சயமாக இணையத்தின் துணை கொண்டு அமைத்து விட முடியும்.

### தமிழ் படிக்கும் ஆற்றல்

இரண்டாவது சிக்கலாகிய, தமிழ் எழுத்தை படிக்கும் ஆற்றலை நமது அடுத்த தலைமுறை இழப்பதனால் அவர்களுடன் நெருக்கத்தையும் தொடர்புகளையும் நாம் இழக்கின்றோம்.

கணிணி வழியாக பல்-ஊடக தொழில் நுட்பத்தின் துணை கொண்டு (Multimedia Technology) மென் பொருட்கள் உருவாக்கப்பட வேண்டும். பல மென் பொருட்களும் உருவாகியுள்ளன. அவ்வகையில் எங்களால் உருவாக்கப்பட்டுள்ள குறுந்தகடு **"செந்தமிழ்"** என்னும் பெயர் உடையதாகும். செந்தமிழ் மூலம் ஆசிரியர் சென்று பயிற்றுவிக்க இயலாத சூழ்நிலையில் உள்ளவர்களுக்கு கணிணியின் மென் பொருளே ஆசிரியராக இருந்து ஒலி, ஒளி, படம் எழுத்து போன்ற அனைத்து ஊடகங்களையும் பயன்படுத்தி மிகவும் எளிமையாகவும்; விரைவாகவும் பயிற்றுவிக்க முடியும். குறுந்தகடு (CD ROM) வழியாகவோ அல்லது இணையம் வழியாகவோ உலகின் எந்த மூலையிலும் வாழும் தமிழ் மாணவர்கள் தமிழ் பேச்சு, எழுத்து, இலக்கணத் தமிழை முறையாகக் கற்று விட முடியும். இணையத்தின் வழியாகவோ அல்லது பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் படிக்கும் போதும், கேட்கும் போதும், பார்க்கும் போதும் அவர்களுடைய மொழித்திறன், சொற்திறன் செழுமை பெறும். தமிழர்களுடைய மொழி, பண்பாட்டு கலாச்சாரம் ஆகியவை உலக அளவில் பேணப்படும்.

## உலகத் தமிழர்கள் பொருளாதார வல்லமை பெற

மூன்றாவதும் மிக முக்கியமான சிக்கலுமாகிய தமிழர்களின் பொருளாதார உயர்வுக்கு தமிழ் மொழி பயன்படவேண்டும். தமிழர்கள் பொருளாதார வல்லமை பெறவேண்டும் என்பதற்கு எப்படி இணையத்தை பயன்படுத்தலாம். எந்த ஒரு பிரச்சனைக்கும் தீர்வு காண்பதற்கு முன், நம்முடைய பலம் என்ன, பலவீனம் என்ன, என்பது ஆராயப்பட வேண்டும். அந்த வகையில்

## தமிழர்களின் பலம்

1. தமிழர்களின் பலம், ஆறு கண்டங்களிலும், அறுபத்தைந்து நாடுகளுக்கு மேற்பட்டு பரவி வாழும் ஒன்பது கோடித் தமிழர்கள் ஆகும்.

2. கல்வி கற்ற தொழில் நெறிஞர் சமூகமாக தமிழர்கள் விளங்குகின்றனர்.

   நூற்றாண்டுகளாக தமிழர்கள் இழந்த கல்வியை, தமிழ் நாட்டில் தந்தை பெரியார், காமராசர் போன்றவர்களின் அயராத உழைப்பின் காரணமாகவும், மற்ற நாடுகளில் உள்ள தமிழர்கள் அந்தந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அரசியல் சூழ்நிலைகளின் காரணமாகவும் பெற்று, கல்வி கற்றவர்களாக இந்த நூற்றாண்டில் மாறியுள்ளனர். மொத்தத்தில் உலக அரங்கில் கல்வி கற்ற தொழில்நெறிஞர் (Professional Community) இனமாக தமிழர்கள் விளங்குகிறார்கள்.

இவை இரண்டும் மிக சிறப்பான பலங்களாகும்.

## தமிழர்களின் பலவீனம்

1. உலகம் பரவிய தமிழர்கள் தங்களுக்குள், அறிமுகமும், தொடர்பும், பொருளாதார உறவுகளும் இல்லாமல் இருப்பது.

2. உலகம் பரவிய தமிழர்களின் அறிவும், ஆற்றலும், உழைப்பும் தமிழ் இனத்தின் வளர்ச்சிக்குப் பயன்படாமல் இருப்பது.

நாம் இன்றையத் தமிழர்களின் வாழ்வையும், வரலாற்றையும், பலத்தையும், பலவீனத்தையும் பார்த்தோம். பலவீனங்கள், பலமாக மாற்றப்பட வேண்டும். எண்ணிக்கை பலம் எண்ண பலமாக மாற்றப்பட வேண்டும். எண்ண பலம், பொருள் வளமாக மாற்றப்பட வேண்டும். நமது விடியலுக்கான தீர்வுகளையும் வரலாறு தந்திருக்கும் பாடங்களில் இருந்தே பெற்றுக் கொள்ளலாம்.

## தொழிற்புரட்சியிலிருந்து தகவல் யுகத்திற்கு

இங்கிலாந்தில் பொருள் உற்பத்தி முறையில் ஏற்பட்ட மாறுதலின் காரணமாக உருவானது தொழிற்புரட்சி. தொழிற் புரட்சியினால் ஏற்ப்பட்ட உற்பத்தி பெருக்கதால் சந்தை விரிவடைந்தது, புதிய சந்தைகளை தேடி புறப்பட்ட ஆங்கிலேய இனம் தொழில் சார்ந்த வணிக இனமாக வளர்ச்சி பெற்றது. உலகில் அந்தக் காலக் கட்டத்தில் ஏற்பட்ட அந்த மாறுதலை உள்வாங்கிக் கொள்ளாத காரணத்தினால் தமிழ்ச் சமுதாயம் கூலிகளாகப் உலகம் பரவிய நிலை ஏற்பட்டது. எனவே **தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு 20% விழுக்காடு மக்களேனும் வணிகர்களாக, தொழில் அதிபர்களாக மாற்றப்பட வேண்டும்.**

இன்றைய உலகில் பொருளாதார வளம்மிக்க மனிதர்களே மதிக்கப்படுகின்றனர். எக்காலத்திலும் பிச்சைக்காரர்கள் மதிக்கப்படுவதில்லை. உலக அரங்கில் தமிழினம் உரிய மரியாதையைப் பெற பொருளாதார வல்லமை பெற்ற இனமாக மாற வேண்டும்.

இன்றைய உலகம், ''உலக மயமாக்கல்'' (GLOBALIZATION) எனும் பொருளாதாரச் சிந்தனையோடு இயங்குகிறது. உலகம் தழுவிய வர்த்தகம், கண்டம் கடந்த பன்னாட்டு நிறுவனங்கள் இயல்பாகி விட்டன. நாம் வாழ்ந்து கொண்டிருப்பது தகவல் யுகம். அனைத்துத் தகவல்களும் திரட்டப்பட்டு, தொகுக்கப்பட்டு, அலசப்பட்டு, அவற்றில் இருந்து புதிய சிந்தனைகளும், முயற்சிகளும், தொடர்புகளும் உருவாகி வரும் காலம் இது. தகவல் யுகத்தின் தேவையின் காரணமாக உருவாகியுள்ள இணையம் ஒரு மாபெரும் சக்தியாகும். நாம் இதுவரை குறிப்பிட்ட தமிழ்ச் சமுதாயத்தின் அனைத்துச் சிக்கல்களுக்கும் இணையத்தின் வழி தீர்வுகாண முடியும்.

## அறிவும் ஆற்றலும்

உலகத் தமிழர்கள் பொருளாதாரத்தில் வல்லமை பெற்றவர்களாகத் திகழ வேண்டும். ஒரு சமுதாயம் பொருளாதார வெற்றிக்காண வேண்டுமானால் அறிவும், ஆற்றலும், பணமும், பொருளும் ஒன்றாக இணைந்து புதிய தொழில் நுட்பங்களைக் கைக் கொண்டு, புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். வணிகச் சந்தை விரிவுப்படுத்தப்பட வேண்டும். ஆனால் தமிழ்ச் சமுதாயத்தின் அறிவும்,

ஆற்றலும், உழைப்பும் மற்ற இனத்தவரின் உயர்வுக்கு கூலிக்கு விற்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. படிக்காத கூலிகளாக இருந்த தமிழினம் இன்று படித்தக் கூலிகளாக மாறிவருகிறது.

தமிழர்களுடைய அறிவு, ஆற்றல், உழைப்பை பயன்படுத்தக் கூடிய, வளர்க்கக் கூடிய ஆற்றல், இன்றைய தமிழ் இனத்திற்குப் போதுமானதாக இல்லை. **ஒரு இனத்தின் அறிவும், ஆற்றலும், உழைப்பும் அந்த இனத்தின் உயர்வுக்கு பயன்படாவிட்டால் அந்த இனம் உயர்வு காண்பது எங்ஙனம்?**

தமிழினம் உயர்வு பெற சிந்தனைப் போக்கில் மாறுதல் வேண்டும். புதிய தொடர்புகள், புதிய தொழில் நுட்பங்கள், புதிய தொழில் முயற்சிகள், புதிய சந்தைகள் கண்டறிந்து உருவாக்கப்பட வேண்டும். தமிழ்ச் சமுயதாயத்தின் அறிவும், ஆற்றலும் தமிழ் இனத்தின் உயர்வுக்கு மிகப் பெரிய துணையாக இருக்கும்.

## தொழில் நெறிஞர் பேரேடு (Professionals Directory)

உலகெங்கும் வாழும், அறிவும், ஆற்றலும் உடைய தொழில் நெறிஞர்கள் புதிய தொழில் நுட்பங்களை மற்ற நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தக் கூடிய வாய்ப்பும் வசதியும் பெற்றிருக்கிறார்கள்.

எனவே இத்தகைய தொழில் நெறிஞர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் பெயர், முகவரி, சிறப்பு பெற்ற துறை, சாதனைகள் போன்ற செய்திகள் இணையத்தின் வழியாக பேரேடாக (Directory) தொகுக்கப்பட்டு உலகத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் புதிய தொடர்புகள் ஏற்பட வழி வகை செய்யப்படும். புதிய தொழில் முயற்சிகளுக்கான தொழில் நுட்பங்கள் மட்டுமன்றி துறை சார்ந்து அல்லது துறை கடந்து தகவல் பரிமாற்றம் தொழில் நெறிஞர்களுக்கிடையே ஏற்படவும் இப்பகுதி வழி செய்யும். தகவல் பரிமாற்றம் தொழில் நெறிஞர்களை மேலும் சிறப்புப் பெற்றவர்களாக மாற்றும். அதன் வாயிலாகப் பல்வேறு பயன்கள் நிகழும். நாங்கள் உருவாக்கியுள்ள **இணைய முகவரி www.intamm.com/prof_link.htm**

## வணிகப் பேரேடு (Business Directory)

சமுதாயத்தின் ஒரு பகுதியாக விளங்கும் தொழில் நெறிஞர்கள் போன்று, மற்றொரு பகுதியான பணமும் பொருளும் உடைய வணிகர்கள், தொழில் அதிபர்கள். தொழில் நிறுவனங்கள் அடையாளம் காணப்படவேண்டும். அவர்கள் வாங்கும், விற்கும், ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் பொருட்கள், உற்பத்தி செய்யும் பொருட்கள் அவை பற்றிய விவரங்கள் ஆகியவை தொகுக்கப்பட்டு வணிகப் பேரேடு இணையத்தில் உருவாக்கப்படவேண்டும். இது ஒரு பொருள் சார்ந்த பேரேடாக (Product Directory) அமையும். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட பொருளை உலக அரங்கில் கையாளும் நிறுவனம், அதன் தொடர்பு முகவரி உட்பட அனைத்துச் செய்திகளையும் தேடுதல் முறையில் (Searchable) நாம் பெறக் கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும். வணிகப் பேரேடாக அமைந்துள்ள இணைய முகவரி **www.intamm.com/busi_link.htm**

## தொழில் நெறிஞர் பேரேடும் வணிகப் பேரேடும்

தொழில் நெறிஞர் பேரேட்டின் மூலம் தொழிலதிபர்களும், வணிகர்களும் தொழில் முனைவோர்களும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு புதிய தொழில் நுட்பங்களையும், தொழில் அறிவையும் பெற்றுக் கொள்ள முடியும்.

வணிகப் பேரேட்டின் மூலம் ஒரு தொழில் நெறிஞர் ஒரு குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தை அணுகி தங்களின் ஆற்றல் மற்றும் அனுபவத்தின் துணைக் கொண்டு வழிகாட்டலாம். தொழில் நெறிஞர்களும் பொருளீட்டலாம். இதன் மூலம் தொழில்கள் சிறப்பாக நடைபெறும்.

தொழில் முனைவோருக்கு தகுந்த வழிகாட்டுவதோடு, தகுதிவாய்ந்தவர்களுக்கு முதலீட்டு வாய்ப்புகளை (Investment Opportunities) அறிமுகப்படுத்தக்கூடிய வாய்ப்பும் ஏற்படும்.

தொழில் நெறிஞர் பேரேடு, வணிகப் பேரேடு இவற்றின் துணையால் புதிய தொழில் நுட்பங்கள் கொண்டு தொழில்கள் செழுமைபெறும், புதிய தொழில் முயற்சிகள் ஏற்படும். பல புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும். அதுமட்டுமில்லாமல் இந்தப் பகுதிகளின் மூலம் தகுதிவாய்ந்த தமிழர்கள் வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்பு பெறக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும். அவ்வகையிலும் தமிழர்கள் பொருளாதார வல்லமை பெறுவார்கள்.

## தமிழருக்கான உலகச் சந்தை

புதிய தொழில்கள் மலர்வதன் தொடர்ச்சியாக உற்பத்தி பெருகும். தமிழரின் சந்தை விரிவடையும். தேவை ஏற்படும். அச் சூழ்நிலையில் பல நாடுகளிலும் வாழும் தமிழர்கள் தம் நாடுகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி விற்க கூடிய (Trading) வாய்ப்பு உருவாகும். பல நாடுகளில் தமிழரின் பொருட்கள் விற்பனைக்கு செல்லும். அந்த அந்த நாடுகளில் உற்பத்தியாகும் ஏனைய பொருள்களும் உலகச் சந்தையில் இடம்பெறுவது தமிழர்கள் வழி நிகழும்.

இது தொடர்பாக நிகழக்கூடிய அனைத்து, தகவல் தொடர்புகளுக்கும் செலவு குறைந்த, விரைவான, எளிமையான தகவல் தொடர்பாகிய இணையம் பெருமளவு பயன்படும்.

## வணிக மொழி தமிழ்

இன்றளவில் உலகில் பிற தொழில், வணிகம் சார்ந்த இனங்கள் தங்கள் இனத்தை சேர்ந்தவர்களோடு தொடர்பு கொண்டு வணிகம் செய்யும் போது தங்களின் தாய் மொழியிலேயே தொடர்பு கொள்கிறார்கள், உரையாடுகிறார்கள். அந்த வகையில் தமிழர்களுக்கிடையே வணிகம் நடைபெறும் போது தமிழ் மொழி வணிக மொழியாக மாறும்.

பொருளாதார வல்லமை பெற்றவர்களின் மொழி, பிறிதொரு மொழியை தாய் மொழியாக பெற்றவர்களால் பொருளாதார காரணங்களுக்காகக் கற்கப்படுகிறது. உதாரணம் ஆங்கிலம், ஜெர்மன், சப்பானியம், பிரெஞ்சு போன்றவை. தமிழர்கள் **World is our resources. World is our Market** என்ற சொற்றொடருக்கு ஏற்ப உலகம் தழுவிய வணிகத்தில் ஈடுபட்டு பொருளாதார வல்லமை பெற்றவர்களாக மாறும் போது இன்று நாம் கற்கத் தயங்கும் தமிழ் மொழி உலகத்தவராலும் கற்கப்படும். இன்று மொழி வளத்திற்காகவும், ஆன்மீக, வாழ்வியல் கருத்துக்களுக்காகவும் பயிலப்படும் தமிழ் மொழி உலக மாந்தர்களால் தமிழர்களோடு ஏற்படக்கூடிய வணிக தொடர்புக்காகவும் கற்கப்படும் நிலை வரும்.

## தமிழர்களுக்காக இணையம்

இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு இணையப் பரப்புகள் மற்றும் முகவரிகளின் துணைகொண்டு அரிய தகவல்கள் பெறப்பட்டமை, புதிய தொழில் முயற்சிகள், பொருள்கள் சந்தைப்படுத்தப்பட்ட நிகழ்வுகள், தொழில்நுட்ப தகவல் பரிமாற்றங்கள், புதிய அறிமுகங்கள் கடந்த ஓராண்டுக்குள் உலக தமிழர்களிடையே நிகழ்ந்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். எனவே உறுதியாக இணையத்தின் மூலம் உலகத் தமிழர்களின் கலாச்சார பண்பாட்டு தளம் வலுவாக அமைக்கப்படும். தமிழர்களிடையே நெருக்கமான தொடர்புகள் ஏற்படும் தமிழ் மொழி வணிக மொழியாகும், தமிழர்கள் அறிவு சார்ந்த துறைகளில் வெற்றி பெறுவார்கள், தமிழர்களின் வணிகம் உலகம் தழுவியதாக அமையும் தமிழர்கள் பொருளாதார வல்லமை பெறுவார்கள். தமிழர்கள் உலகில் உரிய மரியாதையை பெறுவார்கள்.

**தொன்ம வேர்களாகிய தமிழர்களை மின் வேராகிய இணையத்தின் மூலம் இணைக்கும் போது இவ்வுலகில் தமிழர் எழுச்சி ஏற்படும்.**

ISBN 81 - 7023 - 903 - 6

Allied Publishers Ltd.